விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(சி-5331)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 18 வெள்ளிக்கிழமை (01.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 044

## வயலில் அகப்பட்ட மலைப்பாம்பு

கரணவாயில் சம்பவம்



24

## கேப்பாப்பிலவில் போராடும் பெண்கள்; ஊடகவியலாளர்களை புகைப்படம், வீடியோ எடுக்கும் இராணுவத்தினர்!

போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் குற்றச்சாட்டு



(பனிக்கன்குளம்).

நிலமீட்புக்காக கேப்பாப்பிலவில் போராடும் பெண்களை இராணுவத்தினர் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து அச்சுறுத்துவதாக போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் அங்கு செய்தி சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்களையும் புகைப்படம் எடுப் 23

## விக்னேஸ்வரன் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வட மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் தீர்ப்பு வழங்கல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வட மாகாண அமைச்சராக இருந்த ப.டெனீஸ்வரன் பதவி நீக்கப்பட்டமைக்கு எதிராக, 24

## புதிய அரசியலமைப்பு ஒருபோதும் வராது!

யாழில் அமைச்சர் மனோ கணேசன்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசமைப்பு ஒருபோதுமே வராது. அது நடக்காது. அதற்கான காலம் கடந்து விட்டது என அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான 02

## ஒற்றையாட்சி எண்ணக்கரு வடக்கு பிரச்சினைக்கு தீர்வாக அமையாது

நான் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை

- நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(கொழும்பு) ஒற்றையாட்சி எண்ணக்கரு வடக்கு பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என தெரிவித்துள்ள வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஒற்றையாட்சி எண்ணக்கருவை தான் ஏற்றுக் கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார், (02-ம் பக்.)

## கேப்பாப்பிலவு போராட்டத்தில் ஈடுபட்ட தாய் ஒருவர் மரணம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - கேப்பாபுலவில் 692 நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிங்கள அக்கா என்று அழைக்கப்படும் இராமசாமி பிஞ்சம்மா (வயது 61) உயிரிழந்துள்ளார்

சிங்கள மொழியை தாய் மொழியாக கொண்டிருந்த குறித்த வயோதிபத் தாய் கடந்த 22ஆம் திகதி வீதி விபத்தொன்றில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் மாஞ் 24

## நாட்டை பிரிக்க சர்வதேச சக்திகள் தொடர்ந்து முயற்சி

- சமநிலைக்கான தேசிய சக்தி அமைப்பு

(கொழும்பு)

எமது நாட்டைப் பிரிப்பதுதான் அனைவரினதும் ஒரே தேவைப்பாடாக உள்ளது. அதனை நிறைவேற்றுவதற்காகவே சர்வதேச சக்திகள் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றன. ஆரம்பத்தில் பிரபாகரனின் ஊடாக நாட்டிற்குள் பிள 02

## சர்வதேச நீதிமன்றுக்கு இலங்கையை அனுப்ப தமிழ்த் தரப்பு ஒருமித்து கோரவேண்டும் - சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

ஜெனிவா அமர்வின் போது இலங்கையை தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது சர்வதேச நீதிமன்றுக்கு அனுப்பப்பட வேண்டுமென தமிழ் தரப்புக்கள் ஒருமித்து கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என தெரிவித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 23

## ஜனாதிபதி மைத்திரியின் யாழ். வருகையை முன்னிட்டு

குடியிருப்பாளர்களின் விபரங்களை திரட்டும் பணியில் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் யாழ் வருகையை முன்னிட்டு கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்பாளர்களின் விபரம் திரட்டும் பணி இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை காலையில் கோப்பாய் பகுதியிலுள்ள வீடுகளிற்கு சிவில் உடையில் சென்ற பொலிஸார், குடியிருப்பாளர்களிடம் அவர்களின் விபரங்களை 24

## பணிஸில் சட்டை ஊசி

## ஒரு லட்சம் ரூபாய் நட்டஈடு வழங்க நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

சட்டை ஊசியுடன் கூடிய பணிஸை கொள்வனவு செய்த பெண்ணிற்கு நட்டஈடாக ஒரு லட்சம் ரூபாயை வழங்குமாறு கொழும்பிலுள்ள தனியார் பிரபல உணவக உரிமையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சசீ மகேந்திரன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குறித்த பெண் மருதானை பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் சட்டை ஊசியுடன் கூடிய பணிஸை கொள்வனவு செய்துள்ளார். இதன் பின்னர் சம்பவம் தொடர்பில் 02

## இந்த வருடத்தில் புதிதாக அரசாங்கம் ஒன்று உருவாகும்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை வெளியீடு



(கொழும்பு)

இந்த வருடம் புதிய அரசாங்கம் ஒன்று உருவாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் துரோகம் இழைக்கும் சக்திகளை அடையாளம் கண்டு அவர்களை தோல்வியடைச் செய்ய 23

## இலங்கையின் சுதந்திரதினம் தமிழருக்கு கரி நாளாகும்!

யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை




(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் அடக்கு முறைக்குள் இருக்கும் நிலையில் இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ் மக்களிற்கு சுதந்திரம் கிடைத்த நாளாக ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வடக்குப் பிரச்சினைக்கு...

கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஒற்றையாட்சி எண்ணக்கரு என்பது வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வாகாது. ஒற்றையாட்சி என்று கூறும் போது, சிங்கள நிர்வாகம் என்ற அர்த்தம் ஏற்படும்.

மக்களை ஏமாற்றுவதற்காக பலவேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. ஒருமித்த நாடு என தமிழில் கூறுகின்றனர்.

அதன் அர்த்தம் ஐக்கிய நாடு என்பதாகும். அது ஒற்றையாட்சி நாடு என்று அர்த்தமாகாது எனவும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஒரு லட்சம்...

உணவக உரிமையாளருக்கு தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் , அதனை ஏற்க மறுத்த உரிமையாளர் குறித்த பெண்ணை தகாத வார்த்தைகளால் தூற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதனை தொடர்ந்தே குறித்த பெண் அந்த உரிமையாளருக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். (ம-3)

## புதிய அரசியல...

மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நான் மக்களிடம் உண்மையைச் சொல்லவே விரும்புகின்றேன். அவர்களை ஏமாற்ற விரும்பவில்லை. புதிய அரசமைப்பு வரவே வராது.

நான் மக்களிடம் உண்மையைச் சொல்ல விரும்புகின்றேன். வழிகாட்டல் குழுவுக்குள் இருக்கும் சூழல் நன்றாக இல்லை. ஆகவே, இந்த அரசமைப்பு வர வாய்ப்பில்லை என்று இரு வருடங்களுக்கு முன்பே சொன்னேன். ஆனால், அதனை யாரும் கேட்கவில்லை. நான் அன்று சொன்னது இன்று சரியாக இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## நாட்டை பிரி...

வினை ஏற்படுத்த முயற்சித்தனர். பின்னர் புதிய அரசியலமைப்பின் மூலம் நாட்டைப் பிரிக்கும் சதித்திட்டங்களை முன்னெடுத்ததுடன், தற்போது நாட்டை முழுமையாக ஆக்கிரமிக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுடன் இரகசிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார் என சமநிலைக்கான தேசிய சக்தி அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

சமநிலைக்கான தேசிய சக்தி என்ற அமைப்பு நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையில் இது தொடர்பில் கருத்து தெரிவித்த ரியர் அட்மிரல்சரத்வீரசேகர மேலும் கூறுகையில்,

பாராளுமன்றம், அமைச்சரவை அனுமதியின்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுடன் இரகசியமாக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார். குறித்த ஒப்பந்தத்தின்படி இலங்கையின் துறைமுகங்களில் தரித்து நிற்கும் அமெரிக்க படையினரின் கப்பல்கள் மற்றும் அக்கப்பலில் உள்ள படையினர் உள்ளிட்ட அனைவருக்கும் இலங்கை படையினருக்கு வழங்கப்படும் சகல சலுகைகளும் வழங்கப்பட முடியும் என்றது. (ம-3)

# மரண அறிவித்தல்

## திருமதி பரிபூரணம் காசியம்மா



வற்றாப்பளை முள்ளியவளையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரிபூரணம் காசியம்மா அவர்கள் நேற்று வியாழக்கிழமை 31.01.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - கனகம் ஆகியோரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தர் - தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான அமரர் பரிபூரணத்தின் பாசமிகு மனைவியும், இராசசெல்வகுமார், சற்குணசீலன், விமலா, திலகம், தேவிகா, ஜேசீலன், சத்தியசீலன் ஆகியோரின் பாசமிகு அன்புத் தாயாரும் இராசமலர், மேரி றெஜினா, அந்தோனிப்பிள்ளை, கிறிஸ்தியானந்தசிவம், வாஸ்கரன், குணபதி, கனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியை இன்று (01.02.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வற்றாப்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

தகவல் : பேரப்பிள்ளை

வற்றாப்பளை, முள்ளியவளை. (C-5360) பிரதீபன் அன்சலா – அவுஸ்திரேலியா

# யாழ் வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

## சகஸ்ர சங்காபிஷேகம் (1008)


விளம்பி வருடம் தைத்திங்கள் 7ஆம் நாள் 21.01.2019 அன்று நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகப் பூர்த்தி தினமான இன்று (01.02.2019) வெள்ளிக்கிழமை (1008) சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே அடியார்கள் அபிஷேகத்துக்கு தேவையான பால், தயிர், நெய், பூக்கள், இளநீர் போன்ற பொருட்களை ஆலயத்தில் முன்னதாகவே சேர்த்து அகிலாண்ட நாயகியாகிய காளிகா பரமேஸ்வரியின் பெருங் கருணையைப் பெற்று இன்புறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தேவஸ்தான**
**ஆதீன கர்த்தாக்கள்**

(7365)

# 31ஆம் நாள் நினைவு



அமரர்

## வைரமுத்து காந்தன்

தோற்றம்: 28 06 1950

மறைவு: 02 01 2019



குடும்பக் குத்துவிளக்கே
எங்கள் அன்பு அப்பாவே
நாட்கள் முப்பத்தென்று ஆனாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றும் எமை வழிருடத்திச் செல்லும்
எங்கள் தெய்வம்
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்

யாழ் வீதி, இமையாணன். (7373) குடும்பத்தினர்.

## CHITHAMBARA COLLEGE PAST PUPIL'S ASSOCIATION
## சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வல்வெட்டித்துறை, இலங்கை.

## வருடாந்தப் பொதுக்கூட்டம் – 2019

| | | |
|---|---|---|
| தலைமை | : | திரு.சா.சிறீபதி (உபதலைவர் பழைய மாணவர் சங்கம் - வல்வெட்டித்துறை) |
| இடம் | : | கல்லூரி மண்டபம் |
| காலம் | : | 17.02.2019 ஞாயிறு காலை 10.00 மணி |

## நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்
2. தலைமையுரை
3. செயலாளர் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்
   செயலாளர் சென்ற பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
4. பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
5. புதிய நிர்வாகிகள் தெரிவு
6. பிறவிடயங்கள்

முக்கிய குறிப்பு : பிரேரணைகள் ஏதும் இருப்பின் 09.02.2019 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

**பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

31.01.2019
வல்வெட்டித்துறை.

ச.சின்னத்தம்பு, செயலாளர்,
ப.மா.ச.சிதம்பரக் கல்லூரி.

(7355)

# ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் இலங்கை அரசு ஒத்துக்கொண்ட எந்தவிடயமும் இன்னும் முழுமையாக அமுலாக்கப்படவில்லை

## வடக்கு-கிழக்கு சிவில் அமைப்புக்கள் ஐ.நாவுக்கு கடிதம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கை மையப்படுத்தி இயங்கும் சிவில் சமூக அமைப்புக்களால், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் ஊடாக இலங்கை அரசாங்கம் ஒத்துக்கொண்ட எந்தவிடயமும் இன்னும் முழுமையாக அமுலாக்கப்படவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் அலுவலகம், காணாமல் போனோரது உறவினர்களால் எதிர்பார்க்கப்பட்டிருந்த வகையில் அமையவில்லை என்பதோடு, அவர்களின் நம்பிக்கையையும் அந்த அலுவலகம் வெல்லத் தவறிவிட்டது.

சர்வதேச தரப்பின் பங்களிப்புடனான விசாரணை உள்ளிட்ட பொறிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் கூட இடம்பெறவில்லை.

இவ்வாறான நிலையில் இலங்கை அரசாங்கம் சரியான பாதையில் பயணிக்கவில்லை என்பதோடு, பின்னடிப்பையும் செய்கிறது.

எனவே இந்த விடயத்தில் விசேட அறிக்கையிடலுக்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, அறிக்கையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று குறித்த சிவில் சமூக அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (இ-7)

# இலஞ்சம் பெற்ற அதிபர் கைது

(கொழும்பு)

மாணவன் ஒருவரை பாடசாலைக்கு அனுமதிப்பதற்காக 5000 ரூபா இலஞ்சம் பெற்ற ஹொரவப்பொத்தானை பிரதேச பாடசாலை அதிபரொருவர் இலஞ்ச ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொரவப்பொத்தானை, மொரவெவ பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் வழங்கிய தகவலையடுத்து குறித்த அதிபர் இலஞ்ச ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு துறைமுக செயற்றிறனை அதிகரிக்க இரண்டு பைலட் படகுகள் கொள்வனவு - சாகல

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் செயற்றிறனை மேலும் அதிகரிக்கும் பொருட்டு இரு பைலட் படகுகளை கொள்வனவு செய்யும் முகமாக ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடவுள்ளதாக துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி முதல், இப்புதிய படகுகளை கொழும்பு துறைமுகத்தின் பயன்பாட்டிற்கு உள்வாங்க எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்க டொலர்கள் 3.12 மில்லியன்கள் முதலீட்டில் கொழும்பு டொக்யாட் நிறுவனத்தின் மூலம் இந்த பைலட் படகுகள் கொள்வனவு செய்யப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



அமைச்சரவை அனுமதியின் கீழ் வழங்கப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டின் கீழ் இக்கொள்வனவு இடம் பெறுவதுடன், பத்து மாத காலத்திற்குள் இந்த பைலட் படகுகளை தயாரித்து கொழும்பு துறைமுகத்திடம் கையளிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கொழும்பு துறைமுகத்திடம் 4 பைலட் படகுகள் இருப்பதுடன் 2007 ஆம் ஆண்டிலே இவ்வனைத்து படகுகளும் இறுதியாக திருத்தியமைக்கப்பட்டன.

புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட இப்புதிய இரு படகுகளுடன் துறைமுகத்தின் அடிப்படை வசதிகளை மேலும் வலுப்படுத்தலாமெனவும், இதன்மூலம் நவீனமயமான படகுகளை கையாளும் சந்தர்ப்பம் கொழும்பு துறைமுகத்திற்கு கிட்டுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ள பைலட் படகுகள் தற்போதுள்ள படகுகளைக் காட்டிலும் மிக விரைவாகப் பயணிக்கும் என்றும் அதில் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடங்களில் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றமையால் அதற்கு ஏற்றாற்போல் துறைமுகத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது அவசியமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# நாடாளுமன்ற குழப்ப நிலை அறிக்கை பக்கச்சார்பானது

## மகிந்த அணி நிராகரிப்பு



(அநுராதபுரம்)

நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பான அறிக்கை பக்கச்சார்பானது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவித்தமை தொடர்பான அறிக்கையில் 54 ஐ.ம.சு.கூ. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியில் நால்வரும், மக்கள் விடுதலை முன்னணியில் ஒருவரும் மாத்திரமே குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இதி லிருந்து அவ்வறிக்கை பக்கச் சார்பானது என்பது தெளிவாகியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தண்டிக்கப்படின், அதேபோன்று சபாநாயகர் கரு ஜெயசூரியவும் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இவ்வாறு குழப்பம் ஏற்படும்போது நிலைமையை சமரசப்படுத்துவதற்கு சபாநாயகர் சபையை ஒத்தி வைத்திருக்க வேண்டும்.

ஆனால், அந்தக் குழப்ப நிலை நீடிக்க அவர் உடந்தையாகச் செயற்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் குற்றம் சாட்டியுள்ளார். (இ-7)

# பிரதமருக்கு எதிரான வழக்கிலிருந்து நீதிபதி தீபாலி விஜேசுந்தர விலகல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான மனு மீதான விசாரணையிலிருந்து நீதிபதி தீபாலி விஜேசுந்தர விலகியுள்ளார்.

தனிப்பட்ட காரணத்தால் அவ்வழக்கு விசாரணையிலிருந்து அவர் விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சவாலுக்கு உட்படுத்தும் மனு மீதான வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான தீபாலி விஜேசுந்தர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், அந்த வழக்கு விசாரணைகளிலிருந்து நீதிபதி தீபாலி விஜேசுந்தர விலகியுள்ளதால் வேறொரு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அரச நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கி பணம் ஈட்டும் வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் அச்சகம் மற்றும் வெளியீட்டாளர் தனியார் நிறுவனத்தின் முக்கிய பங்குதாரராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்படுவதனால், அவரால் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிவகிக்க முடியாது எனத் தெரிவித்து கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஷர்மிளா கோனவல, பிரதமருக்கு எதிரான மனுவைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# துப்பாக்கிச் சூடு; இரு இளைஞர்கள் பலி! 7 கடற்படையினரிடம் வாக்குமூலம் பதிவு

(கிண்ணியா)

திருகோணமலை - கிண்ணியா, கண்டல்காடு பாலத்திற்கு அருகில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோரை கைது செய்வதற்காக கடற்படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் 7 கடற்படை உத்தியோகத்தர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளதாக கிண்ணியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அமைதியின்மையின் போது கையடக்கத் தொலைபேசியூடாக பதிவு செய்யப்பட்ட காணொலிகளும் மேலதிக விசாரணைகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை இச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு 2 விசாரணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அமைதியின்மையின் போது எதிர்த் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சில் படுகாயமடைந்த 2 கடற்படை உத்தியோகத்தர்கள் கொழும்பு கடற்படையின் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், மேலும் 3 உத்தியோகத்தர்கள் திருகோணமலை கடற்படை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கிண்ணியா - கண்டல்காடு பாலத்திற்கு அருகில் மகாவலி கங்கையில் பாய்ந்து காணாமல் போயிருந்த மற்றுமொரு இளைஞனின் சடலமும் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மக்களின் நிலைப்பாட்டை நிராகரிக்க அரசியல் தலைவர்கள் தீவிர முயற்சி

## மாகாண சபை உறுப்பினர் விசனம்



(பதுளை)

தேர்தலை நடத்தி மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள பல அரசியல் கட்சிகளுக்கு எவ்வித தேவையும் இல்லை என ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

பதுளை பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலைத் தாமதப்படுத்தி மக்களின் நிலைப்பாட்டை நிராகரிக்க அரசியல் தலைவர்கள் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சீஷெல்ஸ் துணை ஜனாதிபதி இலங்கைக்கு நேற்று விஜயம்

(கொழும்பு)

சீஷெல்ஸ் துணை ஜனாதிபதி வின்சன்ட் மெரிடன், இலங்கைக்கான இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

துணை ஜனாதிபதி மெரிடன் உட்பட அமைச்சர்கள் மற்றும் தூதுவர் அடங்கலான குழு இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளது.

இந்தக் குழுவினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடல்களில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# மரண அறிவித்தல்

**வைத்தியர் கந்தாதே ஒபிசரகே இராஜரட்ணம்**

**க.ஒ இராஜரட்ணம் RIMP**

(24 ஆம் பரம்பரை வைத்தியர் சுஜீவா வைத்தியசாலை பாலிநகர், வவுனிக்குளம்)



மகாகளத்தாவ அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுஜீவா வைத்தியசாலை பாலிநகர் வவுனிக்குளம் எனும் முகவரியையும் சுஜீவா வைத்தியசாலை (நாச்சிமார் கோவில் அருகாமை) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியையும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தாதே ஒபிசரகே இராஜரட்ணம் நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாரம்பரிய வைத்தியர் கந்தாதே ஒபிசரகே தங்கமுத்து (அநுராதபுரம்) தம்பதிகளின் அன்பு மகனும் ரஞ்சனியின் அன்புச் சகோதரரும் பாரம்பரிய வைத்தியர் சுசிலாவின் அன்புக் கணவரும் Dr. சந்திரமாலா (சுஜீவா வைத்தியசாலை), காந்திமாலா, காலஞ்சென்ற பிரதீப்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. ஜெயலன் (சுஜீவா வைத்தியாலை பிறப்பு இறப்பு மருத்துவ பதிவாளர்), விஜயசூரியா (பசும்பொன் நகையகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யுகன்யா (தரம் 7 வேம்படி மகளிர் கல்லூரி), கல்கிஜன் (தரம் 3 சென்.ஜோன்ஸ் கல்லூரி), சிந்துஜன் (A/L 2018 சென்.ஜோன்ஸ் கல்லூரி), திருஷாந்த் (A/L 2021 சென்.ஜோன்ஸ் கல்லூரி), தனுப்பிரியா (O/L யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஜீவரட்ணம், வவுனியா பவா ரோகினி ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணத்தில் நாச்சிமார் கோவில் அருகாமையில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் இன்று (01.02.2019) மு.ப 9 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு சுஜீவா வைத்தியசாலை பாலிநகர் வவுனிக்குளம் எனும் முகவரியில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 4.00 மணிக்கு வவுனிக்குளம் பாலிநகர் மயானத்தில் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (7379)

சுஜீவா வைத்தியசாலை,
நாச்சிமார் கோவில் அருகில்
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
Dr. ஜெ.ஜெயலன் 0775594147
Dr. சந்திரமாலா.ஜெ 0773437003
இ.விஜயசூரியா 0789486923

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

## வெளிவாரிப் பரீட்சைகள்

1) வணிகத்தில் மூன்றாம் தேர்வு - 2016 (புதிய பாடத்திட்டம்) - **இறுதிச் சந்தர்ப்பம்**
2) வணிகத்தில் நான்காம் தேர்வு - 2016 (புதிய பாடத்திட்டம்)
3) வணிகமாணி - பகுதி - II - 2016 (பழைய பாடத்திட்டம்) - **இறுதிச் சந்தர்ப்பம்**
4) வணிகமாணி - பகுதி - III - 2016 (பழைய பாடத்திட்டம்)

வணிகமாணி புதிய மற்றும் பழைய பாடத்திட்டம் அடிப்படையிலான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. மேற்படி கற்கை நெறிக்கான மீள்பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பங்குனி (March) மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாட அலகிற்கும் செலுத்த வேண்டிய மீள்பரீட்சைக் கட்டணம் ரூபா.500/= மற்றும் விண்ணப்பப்படிவக்கட்டணம் ரூபா 300/= இனை யாழ்ப்பாண பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் பற்றுச்சீட்டினை www.codl.jfn.ac.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக் கொள்ள முடியும். மற்றும் தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் அனுப்ப விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களினை **பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்பி தங்களுடைய பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி **18.02.2019 (திங்கட்கிழமை)** ஆகும். இப் பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் இது தொடர்பான விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.


**பதிவாளர்**
**31.01.2019** (C-5356)

# தண்ணீர் அஞ்சலி

வரணி மாசேரியைச் சேர்ந்த அகில இலங்கைத்
தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நீண்டகால உறுப்பினரும்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்
உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பாளருமான

## அமரர்

# கந்தர் ஆறுமுகம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01.06.1939 | 31.01.2019 |

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி... சாந்தி...

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**
**தென்மராட்சி.**

(C-5362)

# ஏறாவூரில் கோர விபத்தில் சிக்கிய விரிவுரையாளர் உடல் சிதறிப் பலி!



(ஏறாவூர்)

மட்டக்களப்பு - ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் தனியார் பேருந்து ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதி இடம்பெற்ற விபத் தில் விரிவுரையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மட்டக்களப்பு- செங்கலடியைச்சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 50 வயதுடைய கந்தக்குட்டி கோமலேஸ்வரன் என்பவரே உயிரிழந்துள்ளதாக அடையாளங்காணப்பட்டுள்ளது. அவர் மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் எனத்தெரியவந்து ள்ளது.

அக்கரைப்பற்றிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தனியார் பேருந்து ஆட்டோ ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது. விபத்தின் பின்னர் பேருந்தின் சாரதி பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

இச்சம்பவம் அருகிலிருந்த வர்த்தகநிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவில் பதவிவாகியுள்ளது. உயிரிழந்தவரின் உடற்பாகங்கள் வீதியில் சிதறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மரண விசாரணைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடன் அடுத்தவாரம் பிரதமர் ரணில் விசேட சந்திப்பு

(கொழும்பு)

அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த வாரம் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

பிரதமரின் அழைப்பின் பேரிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதன்போது சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது தொடர்பிலும், எந்த முறைமையின் கீழ் தேர்தல் நடத்தப்பட வேண்டும் போன்ற விடயங்கள்ஆராயப்படவுள்ளன.(இ-7)

# படையினரால் படுகொலை செய்யப்பட்ட 11 கடற்றொழிலாளர்களின் நினைவேந்தல்







(யாழ்ப்பாணம்)

பொன்னாலையில் கடற்றொழிலுக்குச் சென்றபோது படையினரால் படுகொலை செய்யப்பட்ட 11 தொழிலாளர்களின் 22 ஆவது நினைவேந்தல் நிகழ்வு பொன்னாலை ஸ்ரீ கண்ணன் சனசமூக நிலையத்தில் கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது. நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் உறுப்பினர் செ.றதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிதிநிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். மேற்படி படுகொலையில் தனது தந்தை மற்றும் இரு சகோதரர்களை இழந்த நா.தேவராசா பிரதான சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து திருவுருவப் படங்களுக்கு உறவினர்கள் சுடர்களை ஏற்றி மலர் மாலைக்களை அணிவித்தனர். தொடர்ந்து ஏனையோர் மலரஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற தொழிலாளர்கள் பொன்னாலை கொத்தத்துறை படை முகாமுக்கு முன்பாக பாஸ் பெறுவதற்காகக் காத்திருந்த போது அப்பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் ஒன்றைத் தொடர்ந்து படையினரின் தாக்குதலில் 09 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இதேபோன்று, 1985 ஆம் ஆண்டு கடற்றொழிலுக்குச் சென்ற தொழிலாளர்கள் மீது படையினர் நடத்திய தாக்குதலில் 2 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9-89)



சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான பொலிஸ் பரிசோதனை மற்றும் அணிவகுப்பு நிகழ்வுகள் நேற்றுக் காலை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம்.ஏ.கே.கோணார தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தினேஷ் கருணாயக்க கலந்து கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தார். (படங்கள் சுபேசன்)



வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும்
வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள செய்தி
அனுசரணை: இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகம்
Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra
Swiss Agency for Development and Cooperation SDC

# நல்லூரில் ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

ஆன்மீகத்தினை வளர்ப்பதற்காக நல்லூர் கந்த சுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் தோற்றம் பெற்ற கதிர் தொலைக் காட்சியின் வெளியீடாக வெளிவரவுள்ள தெய்வீகம் ஆன்மீக சஞ்சிகையின் ஏற்பாட்டில் தொடர்ந்தும் ஆன்மீக நிகழ்வுகள் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் கதிர் தொலைக்காட்சியின் வர்ணனையாளர் வே. சிவகுருநாதன் தலைமையில் சைவப் புலவர் இராசையா சிறிதரன் சிறப்பு சொற்பொழிவாற்றுவார். (இ

# வசாவிளான் வேலுப்பிள்ளை வித்தியாலயத்தை சொந்த இடத்தில் இயக்க அனுமதிக்கவும்

(யாழ்ப்பாணம்)

30 வருட காலமாக நிரந்தரக் கட்டடம் இன்றி இயங்கும் வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தை சொந்த இடத்தில் நடத்த அனுமதிக்குமாறு பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்திலே அதிக மாணவர்களையும் சிறந்த பெறுபேற்றையும் கொண்ட ஆரம்பப் பாடசாலையாக விளங்கும் இப் பாடசாலை 1990 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சொந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்தது.

10 வருட காலமாக உரும்பிராய் பகுதியில் தனியார் காணியில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தனது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்த இப் பாடசாலை கல்வியில் தனக்கென்றவொரு இடத்தை நிலைநாட்டி வந்தது.

2000-2011 ஆம் ஆண்டு காலப் பகுதிவரை வசாவிளான் மத்திய கல்லூரியுடன் இணைந்து இயங்கிய நிலையில் பாடசாலைச் சமூகத்தால் அப்போதைய ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறியிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக தனியான பாடசாலையாக மாற்றப்பட்டது.

தற்போது வசாவிளான் மத்திய கல்லூரிக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதியில் தற்காலிக கூடாரத்தில் இயங்கி வருகின்றது.

எனவே நிரந்தர இடமின்றி ஒவ்வொரு இடமாக கூடாரங்கள் அமைத்துத் திரியும் இப் பாடசாலையை வலி. வடக்கில் உள்ள சொந்தக் காணிக்குள் இயங்க வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனப் பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ-10)

# வருடாந்தப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வேம்படி சித்தி விநாயகர் ஆலய (வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பரிவாரத் திருக்கோவில்) வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும். (இ-5)

# பாபா விக்கிரக பிரதிஷ்டா மஹா அபிஷேகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஈழத்து சீரடி சாயி மந்திரில் நூதன துவரகமாயி பிரவேசமும் பாபா விக்கிரக பிரதிஷ்டா சம் ரோக்ஷண மஹா அபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளது.

9 ஆம் திகதி காலை 7.30 மணி முதல் காலை 9 மணிவரை கால்காப்பு நடை பெறவுள்ளது. (இ-5)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.வடமராட்சி புற்றளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் கி. குகநாதன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக புற்றளை மகா வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் ஆ. சிவநாதன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய கலாநிதி ச. சுஜேந்திரன் (பழைய மாணவர்) ஆகியோர் கலந்து கொள்வர்

---

கரவெட்டி வதிரி திருஇருதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் இ. இராகவன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக பொறியியலாளர் ஜோ. ஜெ. தவரட்ணராஜா, கௌரவ விருந்தினராக கரவெட்டி பங்குத் தந்தை அருட்பணி அ.ப.அன்ரனிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-60)



யாழ்.வண்ணார் பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் ஐந்தாம் நாளான நேற்றுமுன்தினம் கைலாச வாகனம் உற்சவம் இடம்பெற்றன. (படங்கள்- ஐ.சிவசாந்தன்)



வட மாகாணக் கால்கோள் விழா கடந்த 17 ஆம் திகதி அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரியில் முதல்வர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் இடம் பெற்றது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக மாகாண ஆரம்பப்பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. எஸ். சற்குணராஜாவும் கலந்துகொண்டனர். (இ

# அரச இலக்கிய விருதுக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இவ் வருடம் இடம் பெறவுள்ள அரச இலக்கிய விருது வழங்கும் விழாவிற்கு எழுத்தாளர்கள், கலைஞர்களிடமிருந்து ஆக்கங்களை பெறுக் கொள்ள வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சும் அரச இலக்கிய ஏற்பாட்டுக் குழுவும் நடவடிக்கை எடுத் துள்ளது.

இத் தெரிவுக்காக தமது ஆக்கங்களான தமிழ், சிங் களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்ள நூல்களை பிரதேச செயலக அதிகாரிகள் ஊடாக அனுப்ப முடியுமென கலாசார திணைக் களம் தெரிவித்துள்ளது. (2-10)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை திறந்த வெளி அரங்கில், அதிபர் இ. சிறிதரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வானது சோ. இலட்சுமி நாராயணக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும்.

இதில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர், சு. தேவமனோகரன், சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ. நோபேட் உதயகுமார், சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் ந. ரவிவண்ணன், யா/ ஸ்தான அ.த.க. பாடசாலை அதிபர் ம. முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிறுவுநர் தின உரையை வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு முகாமைத்துவ உதவியாளர் திருமதி. ஷாமினி ஜினோ ஜெனிராஜ் வழங்குவார். (இ-5)

# இலக்கியக் களம்

கதிர் தொலைக்காட்சி யின் ஏற்பாட்டில் கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் இலக்கியக்களம் எதிர் வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். மாநகர சபை ஆணையாளரும் கவிஞருமான இ.த.ஜெயசீலன் தமிழ் கவிதையின் வளர்ச்சியும் தொடர்ச்சியும் என் னும் தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார். தொடர்ந்தும் இவ் விடயம் தொடர்பாக சபையோர்கள் மத்தியில் கருத்தாடல் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (இ-7)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜே/77 மருதடி முதியோர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் தெற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் கே. கணபதி (ஜே.பி) தலைமையில் நடை பெறும். (இ-5)

---

சில்லாலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆலய மண்டபத்தில் தலைவர் சி. கணேசலிங்கம் தலைமையில் நடை பெறும். (இ-5)

# இராசி பலன்

01.02.2019

தை 18, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு

துவாதசி முன்னிரவு 9.45 மணிவரை

மூலம் முன்னிரவு 11.41 மணிவரை

சுபநேரம் 6.36-8.06 மணிவரை

இராகுகாலம் 11.06-12.36 மணிவரை

அமிர்தசித்தம்

வளவன்

கிரகநிலை: செவ் | ராகு | சூரி கேது புத | சனி சுக் சந் | குரு.

சந்திராஷ்டமம்: ரோகினி, மிருகசீரிடம்

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள் பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள் கரைந்த சேமிப்பை ஈடு கட்டும் எண்ணம் உருவாகும் பயணங்களால் பயனுண்டு

**இடபம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற் பட்டு உற்சாகம் குறையும், பிரயாண பயமுண்டு, உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பகையென்று நட்பாகலாம், கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் ஈடேறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி:** இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொள்ளைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கடன் சுமை குறையும் , சுபச் செலவுகள் அதிகரிக்கலாம்.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி கூடும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும், உயரும் போசன சுகமுண்டு.

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுற்றத்தாரின் உதவியுண்டு, போசன சுகமுண்டு.

### 15 வருடம் கடூழியச் சிறை விதிக்கப்பட்ட

# கொலைக்குற்றவாளிகளின் தண்டனைக் காலம் குறைப்பு!

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டு பகுதியில் வசித்த நபர் ஒருவருக்கு மரணத்தை ஏற்படுத்திய குற்றவாளிகள்இருவருக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 15 வருட கடூழியச் சிறைத் தண்டனை காலத்தை மேன்முறையீட்டு நீதிமன்று 10 வருடங்களாகக் குறைத்துத் தீர்ப்பளித்துள்ளது.

2018 ஆம்ஆண்டுஜூலை மாதம் 11 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தீபாலி விஜேயசுந்தரவால் வழங்கப்பட்ட தீர்ப்பை உறுதிப்படுத்தி வாசித்து காண்பிப்பதற்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் நேற்று யாழ்.மேல் நீதிமன்று கூடியிருந்தது. அரச சட்டத்தரணி மாதினி விக்னேஸ்வரன் முன்னிலையாகியிருந்தார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி கல்வியங்காட்டுப் பகுதியில் வசித்த நபர் ஒருவருக்கு மரணத்தை ஏற்படுத்திய குற்றத்துக்காக இரண்டு சந்தேக நபர்களுக்கும் கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அப்போதைய மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால் 15 வருட கடூழிய சிறை விதிக்கப்பட்டது.

குற்றவாளிகள் இருவரும் குறித்த தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்தனர். அதனடிப்படையில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11 ஆம் திகதி நீதியரசர் தீபாலி விஜேயசுந்தர, தனது அறிவிப்பில் 15 வருட கடூழிய சிறைத்தண்டனை 10 வருடங்களாக குறைத்து உறுதிப்படுத்தியிருந்தார். குறித்த தீர்ப்பு 2016 ஆம்ஆண்டு மார்ச்மாதம் 16 ஆம் திகதியில் இருந்தே அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்ப்பை உறுதிப்படுத்தி குற்றவாளிகள் முன் நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் வாசித்துக்காண்பிக்கப்பட்டது. (இ-9)

### புராதன சின்னத்தில் ஏறி புகைப்படம்

## கைதான மாணவர்களின் பெற்றோர் ஆளுநர் ஹிஸ்புல்லாவுடன் சந்திப்பு



(ஏறாவூர்)

புராதன சின்னத்தில் ஏறி புகைப்படம் எடுத்ததற்காக கைது செய்யப்பட்டுள்ள 07 பொறியியல் பீட மாணவர்களுடைய பெற்றோர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் 05 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, புராதன தொல்பொருள் திணைக்களப்பணிப்பாளர்நாயகம்பேராசிரியர் பி.பீ. மந்தவலவை உடனடியாக தொலைபேசியினூடாக தொடர்பு கொண்டு ஆளுநர் கலந்துரையாடியுள்ளார்.

இந்த மாணவர்கள் திட்டமிட்டு வேண்டுமென்றே செய்த விடயம் அல்லவெனவும், தற்செயலாக இடம்பெற்ற விடயமே இதுவெனவும், தாங்கள் மன்னிப்பு வழங்கி தங்களின் நீதிமன்ற அறிக்கையை சாதகமாக வழங்குமாறும் ஆளுநர் அவரைக் கேட்டுள்ளார்.

அந்த மாணவர்களை சட்டரீதியான முறையில் விடுதலை செய்வதற்கு தான் முயற்சி எடுப்பதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா மேலும் தெரிவித்தார். (இ-7)

## சிங்கப்பூரில் நிதிச் சேவைகளுக்கு ஆலோசகராக அர்ஜூன மகேந்திரன்



(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் தொடர்ந்தும் பல நிதிச் சேவைகளுக்கு ஆலோசகராக செயற்பட்டு வருவதை முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மகேந்திரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடி ஊழல் தொடர்பாக தேடப்பட்டு வரும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மகேந்திரன் தென்னாபிரிக்க பத்திரிகையொன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில் தான் தொடர்ந்தும் சிங்கப்பூரில் பல நிதிச் சேவைகளுக்கு ஆலோசகராக செயற்பட்டு வருவதை உறுதி செய்துள்ள அவர், மத்திய கிழக்கு நாடுகளில் முதலீடு தொடர்பிலும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை அர்ஜூன மகேந்திரன் இருக்கும் இடம் தெரியாது என இலங்கை பொலிஸார் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அஜித் மன்னப்பெருமவிற்கு மேலுமொரு இராஜாங்க அமைச்சு



(கொழும்பு)

சுற்றுச்சூழல் பிரதிய மைச்சராக பதவி வகித்த அஜித் மன்னப்பெரும மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் இராஜாங்க அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக்காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இந்த சத்தியப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

**UNIVERSITY OF JAFFNA, SRILANKA**

**WALK-IN–INTERVIEW**

Walk in interview for appointment of Assistant Registrar (Legal & Documentation) on Assignment basis will be held on 05.02.2019 at 09.00 a.m at the Board Room of this University.

**Qualifications:**

An Attorney-at-Law with a degree in Law/Legal studies with not less than two (02) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/ Corporation or Reputed Private Sector Organization or Official bar after obtaining above qualification.

**OR**

An Attorney-at-Law with not than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or Official bar after obtaining above qualification.

**Note:** Selected applicant is expected to carry out legal matters pertaing to University of Jaffna for 20 hours per week.

**SALARY SCALE-Rs.50,000.00 (fixed)**

Candidates are requestad to appear with relevant certificates, NIC and **self prepared applications.**

**Registrar**
**University of Jaffna.**

(C-5354)

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது**

யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் தமிழகத்தின் தலைசிறந்த பேராசிரியர்களில் மூத்த பேராசிரியை அருள்நிதி இந்திரா சண்முகசுந்தரம் அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எளிய முறை உடற்பயிற்சிகள்
எளிய முறை தியானப்பயிற்சிகள்
காயகல்பப் பயிற்சி
அகத்தாய்வுப் பயிற்சிகள்

**காலம்:- 02.02.2019 சனிக்கிழமை தொடக்கம் 08.02.2019 வெள்ளிக்கிழமை வரை**
**நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை**
**பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியர் ச.இந்திரா**
**துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்.**

அகத்தாய்வு 2ம் நிலை 02.02.2019 சனி மற்றும் 03.02.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும். மேலும் திங்கள் தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை அகத்தாய்வு பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்,**
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.இல.021 222 2772**

(C-5355)

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம் 1<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Engineer, America<br>எதிர்பார்ப்பு:உள்நாடு,America<br>தொ.இ: B/9193 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:பூரம் 1<br>கி.பா:34செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:GAQ<br>எதிர்பார்ப்பு:சுய தொழில், நிரந்தரதொழில்<br>தொ.இ: G/2201 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 1<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Civil Engineer,London<br>எதிர்பார்ப்பு:London,France,Germany PR<br>தொ.இ: B/9194 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 1<br>கி.பா: 62 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L,கிராமசேவையாளர்<br>எதிர்பார்ப்பு:A/L,அரசதொழில்<br>தொ.இ: G/2206 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:M.Sc Software Engineer, Australia<br>எதிர்பார்ப்பு:உள்நாடு,பட்டதாரி<br>தொ.இ: B/9197 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 2<br>கி.பா: 11<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:BBA,கணக்காளர்<br>எதிர்பார்ப்பு:அரசதனியார்தொழில்<br>தொ.இ: G/2219 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 1<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Electronic Engineer France<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,வெளிநாடு<br>தொ.இ: B/9198 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை 4<br>கி.பா: 52 செவ் 4 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:Nursing Officer<br>எதிர்பார்ப்பு:அரசதனியார்தொழில்<br>தொ.இ: G/2223 |

கல்யாணமாலை
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

## பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு

# 100 மில்லியன் ரூபா நிதி

## கிளிநொச்சி மாவட்டத்திற்கு விடுவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு மீள்குடியேற்றம் மற்றும் நல்லிணக்க அமைச்சின் ஊடாக 100 மில்லியன் ரூபா நிதி கிளிநொச்சி மாவட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் யுத்தத்தின் பின்னரான பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு பல்வேறு வகையான நிதிகள் விடுவிக்கப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் உடனடித்தேவைகள் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு மேற்படி அமைச்சுடன் தொடர்புகொண்டு அமைச்சின் செயலாளர் சிவஞானசோதியிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, மேற்படி நிதி மாவட்டச் செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அவசரமாக புனரமைக்க வேண்டியிருந்த கிளாலி எழுதுமட்டுவாழ் வீதியினை புனரமைப்பதற்கு 81 மில்லியன் ரூபாவும் உருத்திரபுரம் கிழக்கு 4ஆம் குறுக்கு வீதியின் எஞ்சியுள்ள பகுதியை புனரமைப்பதற்கு ஏழு மில்லியன் ரூபாவும் கனகபுரம், விநாயகபுரம், கிருஸ்ணபுரம் ஆகிய இணைப்பு வீதிகளை புனரமைப்பதற்கு 12 மில்லியன் ரூபாவுமென மேற்படி நூறு மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிதியானது பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் அவசர கோரிக்கைக்கு அமைவாகவே விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)




# இராணுவ வசமுள்ள மைதானம், பொதுநூலகத்தை மீட்க கவனயீர்ப்பு

## கிளிநொச்சியில் அணிதிரளுமாறு அழைப்பு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான பொது நூலகம், பொது விளையாட்டு மைதானம் என்பன தொடர்ச்சியாக இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டு இருப்பதை கண்டித்து எதிர்வரும் 04 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஏ9 வீதியில் அமைந்துள்ள பொது நூலக காணியின் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது

இதற்கான முடிவு கரைச்சி பிரதேச சபையின் கொள்கை அமுலாக்கல் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது. பொது நூலகத்தை நேசிக்கின்ற புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரையும் இந்த கிளிநொச்சி மாவட்டத்திற்குச் சொந்தமான நூலக மற்றும் மைதான காணிகளை ஒன்றிணைந்து மீட்டெடுக்க அழைக்கிறோம் என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் அழைப்பு விடுத்துள்ளார். (2)

# சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்தினால் போதைப்பொருள் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

## கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுப்பு

(கண்டாவளை)



கிளிநொச்சியில் போதைப்பொருள் தடுப்பு வாரத்தை ஒட்டி போதைப்பொருள் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக போதைப்பொருள் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் போதைப்பொருள் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீதிமன்றக்கட்டளைக்கு அமைவாக சமுதாயம் சார் சீர்திருத்தக்கட்டளைக்குட்படுத்தப்பட்டவர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள், கிராம மட்டங்களிலான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கிளிநொச்சி, கோணாவில் மத்தி, கோணாவில் கிழக்கு, காந்தி கிராமம் யூனியன் குளம் உள்ளடங்கலாக ஆறு கிராமங்களை உள்ளடக்கிய வகையில் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உலக தரிசனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட இவ்விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் மனநல சமூக சேவையாளர் மற்றும் மாவட்ட சமுதாயம் சார் சீர்திருத்த அதிகாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இதில் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கியிருந்தனர். (2-315)

# படைப்புழு தாக்கத்தை கட்டுப்படுத்த செட்டிகுளத்தில் விழிப்புணர்வு





(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்திலும் விவசாய நடவடிக்கைகளில் படைப்புழு தாக்கம் ஏற்பட்டுள்ளதால், அதனைக் கட்டுப்படுத்த விசேட விழிப்புணர்வு வெங்கலச்செட்டிகுளம் உதவி பிரதேச செயலாளர் கே.முகுந்தன் தலைமையில், நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் இருந்து துடரிக்குளம் சந்திவரை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கமநல சேவைகள் நிலைய அலுவலர்கள் மற்றும் கமக்கார அமைப்புக்கள் ஊர்வலமாகச் சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததுடன் படைப்புழு தாக்கம் தொடர்பிலும், அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பிலும் மக்களுக்கு தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் சோளம் உள்ளிட்ட பல்வேறு பயிர்களில் படைப்புழு தாக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# வவு/தமிழ் மத்திய மகா வித்தியில் மகா வித்தியன்கள் தினம் நாளை மறுதினம்

(குருமன்காடு)

"வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழையமாணவர் சங்கமானது இப் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய அனைத்து பழைய மாணவர்களையும் மீண்டும் பாடசாலையில் அணிதிரட்டும் நோக்குடனான ஒன்று கூடல் நிகழ்வொன்றை "மகா வித்தியன்கள் தினம்" எனும் பெயரில் எதிர்வரும் 3 ஆம் திகதி பாடசாலையில் ஏற்பாடு செய்துள்ளது.

இந் நிகழ்வானது அன்றையதினம் காலை 8 மணிக்கு பாடாசலையிலிருந்து நடைபவனி ஆரம்பமாகி மீண்டும் பாடசாலையை வந்தடைந்தவுடன் பழைய மாணவர் அணிகளுக்கிடையேயான மென் பந்து கிரிக்கெட் போட்டிகள் உட்பட்ட சிநேகிதபூர்வ விளையாட்டு போட்டி நிகழ்வுகளும், பிள்ளைகளுக்கான விநோத விளையாட்டு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்வுகள் அன்றைய தினம் மாலை வரை பாடசாலையில் இடம்பெறும்.

இப் பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக அனைத்து பழையமாணவர்களையும் ஒன்று சேர்த்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உரமூட்டும் இந்த ஆரம்ப நிகழ்வில் அனைத்து பழைய மாணவர்களையும் தங்கள் குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (2-250)

# மன்னாரில் 'கிராம சக்தி' திட்ட

## அமுலாக்கத்திற்கான கலந்துரையாடல்



(மன்னார்)

மன்னார் மாவட்ட "கிராம சக்தி" திட்ட அமுலாக்கத்திற்கான கலந்துரையாடல் மாவட்டச் செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்டத்தின் பிரதேச செயலாளர்களின் பங்கேற்போடு நடைபெற்ற இக் கலந்துரையாடல் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தானின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இதன் போது ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# இரவுவேளைகளில் வீதிகளில் படுத்துறங்கும் கால்நடைகள் நாளாந்தம் உயிரிழப்பு

## சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவிக்கப்பட்டும் நடவடிக்கை இல்லை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் நிலையப்பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதுடன் நாளாந்தம் விபத்துக்களும் இடம் பெற்று வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கால்நடைகளின் நடமாட்டம் காரணமாக பரந்தன் முல்லை வீதியில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெற்று கால்நடை உயிழப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கமக்கார அமைப்பினர், கமநல சேவை திணைக்களத்தினர் ஆகியோருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆதலால் இதனை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுள்ளனர். (2)

# மோ.சைக்கிளில் மதுபோதையில் பயணித்த குற்றச்சாட்டில் 10 பேர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் போதைப்பொருள் தடுப்பு வாரத்தையொட்டி போதை ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய மோட்டார் சைக்கிள்களில் மதுபோதையில் பயணித்த குற்றச்சாட்டில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளில் பயணித்த 5 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நீதிமன்ற நடவடிக்கைக்கு விரைவில் உட்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.டபிள்யூ.விமலகுணரட்ன தெரிவித்துள்ளார். (2)

# இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்த ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி இ.பாலேந்திரா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டாவளைப் பிரதேச உதவிப் பிரதேச செயலர் மனோகரன் பிரதீப், சிறப்பு விருந்தினர்களாக கண்டாவளை கோட்டக்கல்வி அதிகாரி சு.தர்மரட்ணம் மற்றும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பொன்னம்பலம் விஜயநாதன், கிராம அலுவலர் திருமதி கிருஸ்ணவதனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-315)

# குடிநீர் போத்தல்; நிர்ணய விலையை மீறினால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடிநீர் போத்தல்களை நிர்ணய விலைக்கு விற்பனை செய்யாத வர்த்தக நிலையங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் வட மாகாண பணிப்பாளர் மொஹமட் சாபிக் எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

வடக்கு மாகாணத்திலுள்ள பல வர்த்தக நிலையங்களில் பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் குடிநீர் போத்தல்களை விற்பனை செய்து வருவதாக பல முறைப்பாடுகள் பொதுமக்களிடத்திலிருந்து எமக்குக்கிடைக்கப் பெற்றுள்ளன. போத்தல்களில் குறிக்கப்பட்ட விலை என தெரிவித்து குடிநீரை அதி கூடிய விலைக்கு பல வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த வருடம் 28 ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலின் படி குடிநீர் போத்தலுக்கான நிர்ணய விலை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு ஏற்ற வகையில் வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்வதில்லை என பொது மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே வர்த்தமானி அறிவித்தலின் படி

350 ml - 499 ml - 26 ரூபா, 500 ml - 749 ml - 35 ரூபா, 750 ml - 999 ml - 40 ரூபா, 1 - 1.49 l - 50 ரூபா, 1.5 l - 4.99 l - 70 ரூபா, 5l - 6.99 l -150 ரூபா, 7l 170 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக்கே வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குடிநீர் போத்தலை விற்பனை செய்ய வேண்டும்.

அவ்வாறு விற்பனை செய்யாதவர்கள் தொடர்பில் பொது மக்கள் முறைப்பாடுகளை தெரிவித்தால் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபைக்கு சென்றும் முறைப்பாடுகளை பதிவு செய்யலாம்.

அல்லது அலுவலக நாட்களில் காலை 8.20 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரை 021 221 9001 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் என அவர் மேலும்தெரிவித்தார். (இ-9-10)

# மாணவர்கள் கௌரவிப்பு





(யாழ்ப்பாணம)

கடந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி அதி சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பலாலியில் உள்ள பாதுகாப்பு தலைமையகத்தில் இடம்பெற்றது.

பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராட்சியின் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில்,

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்று க.பொ.த உயர்தரத்தில் அதி சிறந்த பெறுபேற்றை பெற்ற 30 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்குரிய கற்றல் உபகரணங்கள் மற்றும் பல்கலைக் கல்விக்கான ஊக்குவிப்புத் தொகையாக 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

அத்துடன், வாழ்வகத்தைச் சேர்ந்த இரு மாணவர்களுக்கு அவர்களின் உயர்கல்விக்காக எதிர்வரும் 3 வருடங்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா தொகையும் வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (இ-9-101)

# "மனக்கிறுக்கல்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலாநிதி ஸ்ரனி அன்ரனி அடிகளாரின் "மனக்கிறுக்கல்" (சிந்தனைத் துளிகள்) நூல் வெளியீடு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம், பிரதான வீதி மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில், அருட்கலாநிதி வின்சன்ற் பற்றிக் அ.ம.தி. தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக உளசமூக சீராளர் கலாபூஷணம் செ.யோசப் பாலா, சிறப்பு விருந்தினராக திருமதி.மேரி இருதயதாஸ், கௌரவ விருந்தினராக யாழ்.ரத்தினா திருமதி பி.எப்.சின்னத்துரை ஆகியோர் கலந்து கொள்வர்.

இந் நூலின் வெளியீட்டுரையை திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோசப் யோன்சன் ராஜ்குமாரும், மதிப்பீட்டுரையை யாழ்.ரத்னா கவித்தென்றல் எஸ்.ஏ. அழகராசாவும் வழங்குவர். (இ-5)

# கடல்வாழ் முலையூட்டிகளை பார்க்க அரசாங்கத்தின் அனுமதி அவசியம்

(கொழும்பு)

கற்பிட்டி, மிரிஸ்ஸ, திருகோணமலை ஆகிய கடற்பரப்பிலுள்ள முலையூட்டிகளைப் பார்வையிடுவதற்கு, அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து அரசாங்கம் சட்டமொன்றை கொண்டு வரவுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும், காலங்களில் இலங்கைக் கடற்பரப்புகளில் காணப்படும் டொல்பின், திமிங்கலம் ஆகியவற்றைப் பார்வையிடுவதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்படவுள்ளது.

இந்தத் தொழில் ஒழுங்குப்படுத்தப்படாது முன்னெடுக்கப்படுவதால், கடல்வாழ் உயிரினங்கள் பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதுடன், குறித்த முலையூட்டி இனங்கள் இலங்கைக் கடற்பரப்பிலிருந்து அழிந்து செல்லும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஒருபோதும் ஏற்கமாட்டோம்

## சிறிநேசன் எம்.பி.திட்டவட்டம்

(ஏறாவூர்)

மனித குலத்திற்கும், நாட்டிற்கும் அவமானமாக இருக்கக்கூடிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்ப்போமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

"பயங்கரவாத சட்டத்தின் மூலம் எமது சிறுபான்மையினம் அதிகமாக பாதிக்கப்படுகின்றது என்பது வெளிப்படையான உண்மை.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், மோசமாக மனித உரிமைகள் மீறுகின்ற சட்டங்களாகும். இதன் நோக்கம் அதிகார வர்க்கம் தங்களது வண்டவாளங் களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், தாங்கள் நினைத்தபடி ஆட்சி செய்வதற்கும் இந்தச் சட்டங்களைக் கொண்டு ஜனநாயகத்திற்குள் ஒரு சர்வாதிகாரத்தைக் கொண்டு வருவதேயாகும் எனவே இவ்வாறான சட்டங்களு க்கு நாங்கள் எப் போதும் எதிராகவே செயற் படுவோம்.

கடந்த காலங்களில் குட்டிமணி, தங்கதுரை போன்றவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்ட விதம் அனைவரும் அறிந்ததே. பல சித்திரவதைகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலம்பெற்று அதன் அடிப்படையில் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

எனவே மனித குலத்திற்கும், நாட்டிற்கும் அவமானமாக இருக்கக் கூடிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிச்சயமாக எதிர்த்தே செயற்படுவோம். அது ஐக்கிய தேசியக் கட்சியாகஇருந்தாலும், வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும் எதிர்த்தே செயற்படுவோம்" என்றும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமெரிக்காவிலிருந்து மத்தளவிற்கு விமான சேவையைப் பெற்ற ஜாலிய



(கொழும்பு)

அமெரிக்காவுக்கான முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய, இலங்கையின் வெளியுறவு அமைச்சுக்கு தெரியாமல், ஸ்ரீலங்கன் விமான சேவையைப் பயன்படுத்தியதாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து மத்தள விமான நிலையத்துக்கு இந்த விமானம் அனுப்பப்பட்டது.

இதற்காக செலவான 7.8 மில்லியன் ரூபாவை வெளியுறவு அமைச்சுக்கு பாரப்படுத்தியதாகவும் சாட்சியம் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயாரில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் இந்த சாட்சியம் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயாரின் நிதி முகாமையாளர் கசுன் ரட்நாயக்க இந்த சாட்சியத்தை வழங்கியுள்ளார்.

இதேவேளை 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகம், வெளியுறவுத் துறை அமைச்சு மற்றும் பொதுநலவாய விளையாட்டுக்குழு ஆகியன இணைந்து 2006ஆம் ஆண்டுக்கும் 2014ஆம் ஆண்டுக்கும் இடையில் 122.3 மில்லியன் ரூபாய்களுக்கு ஸ்ரீலங்கன் விமான சேவையை பெற்றுக் கொண்டமை தொடர்பிலும் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தியுள்ளது. (இ-7)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடத்தனை அம்பன் அ.மி. த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர்வி.பரமேஸ்வரன்தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ். செல்வக்குமரன், சிறப்பு விருந்தினராக, மருதங்கேணி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பி.மேகவண்ணன் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ)

# மாளிகைத்திடல் வீதி புனரமைப்பு

(பொற்பதி)

வடமராட்சிக் கிழக்கு குடத்தனை மாளிகைத்திடல் குறுக்கு வீதி நீண்ட காலத்திற்குப் பின்னர் புனரமைக்கப்பட்டுள்ளது.

துரித கிராம அபிவிருத்தித் திட்டத்தின் (கம்பெரலிய) வேலைத்திட்டத்தின் ஊடாக கிராமத்திற்கு ஒதுக்கப்பட்ட சுமார் இரண்டு மில்லியன் ரூபா நிதியிலிருந்து இந்த வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. சிவனொளி இளைஞர் கழகத்தின் நீண்டநாள் கோரிக்கைக்கு அமைவாக மக்கள் பாவனைக்காக இவ் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. (இ-64)



# சிற்றூர்திகள் சேவை ஆரம்பம்

தென்மராட்சி பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி நாவற்குழி, ஐயனார் வீதி, முத்தமிழ் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி சிற்றூர்திகள் சேவைச் சங்கத்தின் மற்றுமொரு போக்குவரத்துச் சேவை இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இப்போக்குவரத்துச் சேவை நாவற்குழி முத்தமிழ் சனசமூக நிலையத்திலிருந்து சாவகச்சேரி நோக்கியும், யாழ்ப்பாணம் நோக்கியும் நடத்தப்படும். ஆரம்ப நிகழ்வில் சங்கப் பிரமுகர்களும் நிலையப் பிரமுகர்களும் கலந்து கொள்வர். (இ-5)

## தமிழருக்கு எப்போது சுதந்திரம்?

# சர்வதேசத்திடம் நீதி கோரும் அறவழி போராட்டத்திற்கு அழைப்பு

(கிளிநொச்சி)

தமிழருக்கு எப்போது சுதந்திரம்? என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் அனைவரும் தமது கோரிக்கைகளை சர்வதேசத்திடம் எடுத்துரைக்க இலங்கையின் சுதந்திர தினமான எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் நீதிக்காக குரல்கொடுக்க அனைவரையும் அணி திரளுமாறு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விடுவிக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில்.

இறுதிப்போருக்கு பின்னரான ஈழத்தமிழர்களை அழிக்கும் வகையில் இலங்கை அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகள் நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளன.

அது நில ஆக்கிரமிப்பிலிருந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் ஈறாக நீண்ட நாள் சிறையில் வாழும் எமது உறவுகளின் விடுதலை வரை தொடர்ந்து செல்கின்றது.

யுத்தம் முடிந்து பத்து வருடம் கழிந்த நிலையிலும் தீர்வில்லாமல் நீண்டு கொண்டே போகிறது.

எனவே இதற்கு நீதிவேண்டி தமிழருக்கு எப்போது சுதந்திரம்? என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் அனைவரும் எமது கோரிக்கைகளை சர்வதேசத்திடம் எடுத்துரைக்க இலங்கையின் சுதந்திர தினத்தன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலில் அணி திரண்டு நீதிக்காக குரல் கொடுக்க முன்வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)




# கஞ்சா போதையை ஏற்படுத்தும் பாக்கு மாணவர்கள் மத்தியில் அறிமுகம்

## கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் போதைப் பொருளிற்கு அடிமையாகி வருவதாக கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவர் வைத்தியர் ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போதைப் பொருள் பாவனையில் மாணவர்கள் அதிகம் ஈடுபடுவது தொடர்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து குறித்த ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர்ப்புற பாடசாலைகள் சிலவற்றிற்கு அண்மைய நாட்களாக சென்று போதைப்பொருள் பாவனை தொடர்பிலான விழிப்புணர்வு செயற்திட்டங்களை முன்னெடுக்கப்பட்டன.

குறித்த விழிப்புணர்வு கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்து கூறிய பின்னர் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாணவர் மத்தியில்போதைப்பொருள்பாவனை இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் தகவல்களை திரட்ட முடிந்தது.

இதேவேளை போதைப் பொருள் பாவனை தொடர்பில் தன்னிடம் உள்ள பாவனையாளர்களான மாணவர் மத்தியில் ஆய்வு செய்த போது, அவற்றை பெற்றுக்கொள்ள மாணவர்களுக்கு பெற்றோர் பணம் வழங்காத நிலையில், விற்பனையாளர்களாக மாற்றப்படுவதாகவும் தனது ஆய்வில் கண்டு கொண்டதாக தெரிவித்தார்.

சில மாணவர்கள் வகுப்பறையிலேயே போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவதாக கிடைத்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கஞ்சா, போதையை ஏற்படுத்தும் ஒரு வகையான பாக்கு



என மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வியாபார நோக்கத்திற்காகவே மாணவர் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டு வருவதாகவும் மாணவர் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.


போதைப்பொருள் பாவனையுடன் மற்றும் ஏனைய சந்தர்ப்பங்களில் மாணவர்கள் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டால், பல்கலைக்கழக அனுமதியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என ஆலோசனை வழங்கினார். (2)

# 'ஆபத்தை ஏற்படுத்தியுள்ள படைப்புழுவின் தாக்கத்தில் இருந்து விடுபடுவோம்'

## கிளிநொச்சியில் விழிப்புணர்வு செயற்றிட்டம்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ள படைப்புழுவின் தாக்கத்திலிருந்து விடுபடுவோம் எனும் தொனிப்பொருளில் நேற்று கிளிநொச்சியில் விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




கிளிநொச்சி விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட குறித்த விழிப்புணர்வுப் பேரணி கரடிப்போக்கு சந்தியில் 8.30 மணியளவில் ஆரம்பமாகி கிளிநொச்சி பொதுச்சந்தை வரை சென்றுநிறைவுபெற்றது.

இதன்போது படைப்புழுவினால் ஏற்படும் பாதிப்புக்கள், அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள்தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

விவசாய செய்கையில் பாதிப்பை ஏற்படுத்திவரும் படைப்புழுவிலிருந்து பாதுகாக்கும் முறைமைகள் தொடர்பாகவும் விவசாயிகள், பொது மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

விவசாய திணைக்களத்தினர், கமநல சேவைகள் திணைக்களத்தினர். யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீட மாணவர்கள், விவசாயிகள் ஆகியோர் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

சோளம், இறுங்கு, கரும்பு, நெல், மரக்கறிகள், பழங்கள், அவரைப் பயிர்கள், உட்பட நூற்றுக்கு மேற்பட்ட பயிர்களை அழிக்கக்கூடிய பீடை இதுவாகும். எனவே இது தொடர்பான விழிப்புணர்வுகளை விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் இப்பேரணி இடம் பெற்றுள்ளது. (2-312)

# மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தமிழ் மக்கள் முன்னணியின் கரைச்சிப் பிரதேச உறுப்பினர் சி.புவனேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதற்கமைவாக வட்டக்கச்சி மத்திய கல்லூரி, இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மற்றும் இராமநாதபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 7 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் ஆதரவோடு இடம்பெற்ற இந்நிகழ்விற்கு லண்டன் உயர் வசல் முருகன் ஆலயம் நிதி அனுசரணையை வழங்கியது. (2-10)

# உதவிக்கரம் அமைப்பின் 20வது ஆண்டு பூர்த்தியும் விழிப்புணர்வு பேரணியும்



(மன்னார்)

மன்னார் வாழ்வுதயம் நிறுவனத்தின் கிளை நிறுவனமான உதவிக்கரம் அமைப்பின் 20 ஆண்டுப் பூர்த்தி நிகழ்வும் விழிப்புணர்வு பேரணி நிகழ்வும் மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை அன்ரன் தலைமையில் நேற்றுக் காலை 9 மணியளவில் கறிற்றாஸ் வாழ்வுதய பணியகத்தில் இருந்து பேரணியுடன் ஆரம்பமானது.

20 வருடங்களாக உதவிக்கரம் அமைப்பினால் பயன் அடைந்த பயனாளிகளை ஒன்று திரட்டி பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில்பேரணி மற்றும் உதவிக்கரம் அமைப்பில் சக்கர நாற்காலி மதிப்பிடல் பொறுத்துதல் பிரிவு ஆரம்ப நிகழ்வும் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வின் இறுதியில் தெரிவு செய்யப்பட்ட புதிய பயனாளர்களுக்கான சக்கர நாற்காலி மற்றும் மாற்று நிலை உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# உண்டியல் உடைக்கப்பட்டு காணிக்கைப்பணம் திருட்டு



(பூநகரி)

பூநகரி பத்தினிப்பாய் ஆலய வீதிப்பிள்ளையார் உண்டியல் விசமிகளால் நேற்றைய தினம் உடைக்கப்பட்டு காணிக்கைப் பணம் திருடப்பட்டுள்ளது. (2-9)

# வங்காலை வாடியில் இருந்து தங்கூசி வலைகள் மீட்பு

(மன்னார்)

மன்னார் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் மூன்று கடற்றொழில் உத்தியோகத்தர்கள் இணைந்து நேற்றைய தினம் காலை 7 மணியளவில் வங்காலை இறங்குதுறைப் பகுதியில் மேற்கொண்ட கள ஆய்வின் போது தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகள் இரண்டு உரிமை கோரப்படாத நிலையில் அப்பகுதியிலுள்ள வாடியொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இதன்பின்னர் குறித்த தடை செய்யப்பட்ட இரண்டு வலைத்தொகுதிகளையும் மன்னார் நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட வலைத் தொகுதி களின் பெறுமதி சுமார் ஒரு இலட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. (2)

# வியாபார நிலையத்திற்குள் திருட முயன்ற இருவர் மடக்கிப் பிடிப்பு

## கூரிய கத்தி, கடவுச்சீட்டு மீட்பு



வவுனியா - மன்னார் வீதியில் உள்ள வர்த்தக நிலையத்திற் குள் உள் நுழைந்து திருடிய இருவரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள தாதியர் பயிற்சிக்கல்லூரிக்கு முன்பாகவுள்ள பழம் மற்றும் மரக்கறி விற்பனை நிலைய உரிமையாளர் தனது கடையை திறந்துவிட்டு அருகில் இருக்கும் கடைக்கு சென்றிருந்த வேளை, குறித்த பழ மற்றும் மரக்கறி விற்பனை நிலையத்திற்குள் நுழைந்த இருவர் அங்கிருந்த காசுப் பெட்டியை திறந்து பணத்தை திருடியுள்ளனர்.

இதனை அப்பகுதியில் நின்றவர்கள் அவதானித்ததும் குறித்த திருட்டில் ஈடுபட்ட இருவரும் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றனர்.

இதனையடுத்து அங்கு ஒன்றுகூடியவர்கள் குறித்த இருவரையும் மடக்கிப் பிடித்தனர். வவுனியா பொலிஸாரின் தமிழ் மொழி மூல முறைப்பாட்டு பிரிவுக்கு தொலைபேசி மூலம் வழங்கப்பட்ட தகவலை யடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் குறித்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்கள் இருவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்கள் நீர்கொழும்பு மற்றும் வவுனியா கொக்குவெளி பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்களிடம் இருந்து கூரிய கத்தி மற்றும் கடவுச் சீட்டு உள்ளிட்டவையும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கடை உரிமையாளரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (2-250)

# சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய பொறுப்பை ஒருபோதும் குறைத்து மதிப்பிட முடியாது

## ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மனிதனின் மரணத்திற்கும் உடல், உள நோய்களுக்கும் பெரிதும் காரணமாக அமையும் தொழில்நுட்ப கொங்கிரீட் கட்டடங்களையே இன்று அபிவிருத்தியாக பார்க்கப்பட்ட போதும், இயற்கையின் பேண்தகு இருப்பை உறுதிப்படுத்தக்கூடிய புதிய அபிவிருத்தி செயன்முறையே முழு உலகினதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இருபது, இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் உலக அரச தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் நிபுணர்களுக்கு பெரும்பாலும் சுற்றாடலைப் பாதுகாக்கும் தேவை இருக்கவில்லை என்றபோதும், இன்று சுற்றாடலைப் பாதுகாப்பது குறித்து உலகெங்கிலும் அனைவரும் முக்கியமான உரையாடல்களில் ஈடுபட்டிருப்பது சுற்றாடல் அழிவு மனித இருப்பின் முன் உள்ள தீர்க்கமானதொரு பிரச்சினையாக மாறியிருக்கின்ற காரணத்தினாலேயே ஆகுமென்றும், சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய இன்றுள்ள பொறுப்பை ஒருபோதும் குறைத்து மதிப்பிட முடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சுற்றாடல் வழிகாட்டி ஜனாதிபதி பதக்கம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை கல்வியினூடாக சுற்றாடல் பற்றிய அறிவை மாணவர்களுக்கு வழங்கி அவர்களை நடைமுறை ரீதியாக சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைளில் ஈடுபடுத்தி, சுற்றாடல் மீது பற்றுக்கொண்ட எதிர்கால தலைமுறையினரை கட்டியெழுப்புவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

சுற்றாடல்துறை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டுக்கு முன்வைத்துள்ள "நீலப் பசுமை யுகம்" எதிர்கால இலங்கையை கட்டியெழுப்பும் விரிவான செயற்றிட்டத்தில் சுற்றாடல் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து வருட திட்டம் ஒன்றின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித் திட்டம், நான்கு மில்லியன் பாடசாலை மாணவர்களை சுற்றாடலை நேசிக்கும் பிள்ளைகளாக மாற்றுவதை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஜனாதிபதி பதக்கம் வழங்கப்பட்ட சுற்றாடல் வழிகாட்டி ஒருவருக்கு பல்கலைக்கழக நுழைவின் போது பாடவிதானத்துடன் இணைந்த வெளிக்களச் செயற்பாட்டிற்காக 04 புள்ளிகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

எட்டாவது முறையாக இடம்பெறும் சுற்றாடல் வழிகாட்டி ஜனாதிபதி பதக்கம் வழங்கும் நிகழ்வில் 40 பாடசாலைகளை சேர்ந்த 93 சுற்றாடல் வழிகாட்டிகளுக்கு ஜனாதிபதி பதக்கங்கள் வழங்கப்பட்டன.

சுற்றாடல் பற்றிய அறிவை புத்தகங்களுடன் மட்டுப்படுத்தாது அவற்றை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு பிள்ளைகளை பயிற்றுவிக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டம் இந்த வருடம் முதல் அனைத்து பாடசாலைகளிலும் செயற்றிறனாக நடைமுறைப்படுத்தப்படுவதன் அவசியத்தையும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், மகாவலி சுற்றாடல்துறை பிரதி அமைச்சர் அஜித் மன்னப்பெரும, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் ஏ.ஜே.எம்.முசம்மில், பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜெயசிங்க ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# மூன்று துப்பாக்கிகளுடன் மூவர் அதிரடியாகக் கைது

(கொழும்பு)

களுத்துறை - மீகாஹதென்ன பகுதியில் மூன்று துப்பாக்கிகளுடன் மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

23, 45 மற்றும் 46 வயதான மீகாஹதென்ன மற்றும் வலல்லாவிட்ட பகுதிகளை சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (7-8)

# போலி நாணயத்தாள்களுடன் இருவர் பொலிஸாரால் கைது



(திருமலை)

திருகோணமலை - ரொட்டவெவ பகுதியில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போலி நாயணயத்தாள்களுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐந்தாயிரம் நாணயத் தாள்கள் 16உம், ஆயிரம் ரூபா நாணயத் தாள்கள் 95உம் இதன்போது சந்தேக நபரிடம் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர் குறித்த பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7-8)

## பெருமளவு போதைப் பொருள் மீட்பு

# விசாரணை நடவடிக்கைகளுக்காக பங்களாதேஷ் செல்ல குழு நியமனம்

(கொழும்பு)

பங்களாதேஷ் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக, இலங்கை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவால் தெரிவு செய்யப்பட்ட குழுவொன்று, பங்களாதேஷ் நோக்கி பயணம் மேற்கொள்ளவுள்ளது.

பங்களாதேஷுக்கு செல்வதற்கான அனுமதி பெறும் மற்றும் விடயத்தை தெரியப்படுத்தும் உத்தியோகபூர்வ கடிதத்தை, அந்நாட்டுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, இலங்கை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயமும் சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலையும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், டாக்டர் திருமதி. கலாஜினி, சசிதரன் (பழைய மாணவர்) கௌரவ விருந்தினராக சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் மு.அசோக்குமார், ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)


## இருபத்தேழாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இ.ச.பேரம்பலம்(E.S.P)
வாரிவளவு, கரைநகர்
திதி:-துவாதசி.01.03.2019

அன்பிற்கு இலக்கணமாக
பண்பின் சிகரமாக பாசத்தின் உறைவிடமாக
பார் போற்ற வாழ்ந்தவரே!

வர்த்தக உலகில் எமக்கு வழிகாட்டியாக
விளங்கிய அன்புத் தெய்வமே
வாழ்க்கையின் வலிகளைச் சுமந்தீர்!
வசந்தத்தில் மகிழ நீ இன்றில்லை

விண்ணகம் சென்று ஆண்டுகள்
இருபத்தேழு உருண்டோடிவிட்டபோதும்
உம் நினைவுகள் என்றும் மாறாது
உங்கள் ஆத்மா சாந்திபெற வாரிவளவு
கற்பக விநாயகனைத் தொழுது நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

383, மணிஓசை,
கோவில் வீதி,
நல்லூர்.

லயன் E.S.P நாகரத்தினம்(PMJF)
குடும்பத்தினர்

(7356)



### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாகக் கணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:- 076 835 1932, 021 223 2222
உரும்பிராய்.

(7272)



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி.இரத்தினம்மா கேசவலிங்கம்

மலர்வு 06.11.1952
உதிர்வு 04.02.2016

திதி:-01.02.2019



ஆண்டு மூன்று
ஓடி மறைந்ததம்மா-உன்
அன்பு முகம் காணாது
தவித்து நிற்கிறோம்

11/4, நடராஜா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்




# ஜெயலலிதாவின் மரணத்துக்கு காரணமானவர்கள் சிறைக்கு அனுப்பப்படுவார்கள்-ஸ்ராலின் உறுதி



தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணத்துக்கு காரணமானவர்கள் சிறைக்கு அனுப்பப்படுவார்களென தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "ஜெயலலிதாவுக்கும் கருணாநிதிக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். தி.மு.கவுக்கும் அ.தி.மு.க.வுக்கும் கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இறந்தது முன்னாள் முதலமைச்சர். அவரது மரணம் மர்மமாகவே உள்ளது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்க ஆணையம் அமைக்கப்படும் ஆணையம் அமைத்து உண்மையை வெளிக்கொண்டு வருவது மட்டுமல்லாது, ஜெயலலிதாவின் மரணத்துக்கு காரணமானவர்கள் சிறைக்கு அனுப்பப்படுவார்கள்.

அத்தோடு, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மீது 5 கொலை வழக்குகள் உள்ளன. கோடநாடு காவலாளி கொலை செய்யப்பட்டுள்ளார். அந்த கொலையை மறைக்க 4 கொலைகள் என 5 கொலைகள் நடந்துள்ளன. இதுவரை ஊழல் வழக்குகள் முதலமைச்சர்கள் மீது கூறப்பட்டுள்ளன. அதற்கு ஜெயலலிதாவே முன்னுதாரணமாக காணப்படுகின்றார்.

பல மாநில முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களும் சிறைக்கு சென்றுள்ளனர். ஆனால் கொலை முறைப்பாடு ஒரு முதலமைச்சர் மீது கூறப்படுகிறது. இந்த விடயம் தமிழ்நாட்டுக்கு அவமானமாகும்.

எனவே தமிழக அரசுக்கும், இதற்கு முட்டுக்கொடுக்கும் பாசிச பா.ஜ.க. அரசுக்கும் முடிவுகட்டி பாடம் கற்பிக்க வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

# பிரேசில் அணை உயிரிழப்பு 100



(பிரேசிலியா)

பிரேசில் நாட்டில் இரும்புத்தாது சுரங்கத்தில் உள்ள அணை உடைந்த விபத்தில். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளது.

பிரேசில் நாட்டின் தென்கிழக்கு பகுதியில் உள்ள புருமாடின்கோ நகரம் அருகே தனியாருக்கு சொந்தமான இரும்புத்தாது சுரங்கம் உள்ளது. சுரங்கத்தின் அருகில் பயன்படுத்தப்படாமல் இருந்த ஒரு அணை கடந்த 25 ஆம் திகதி திடீரென உடைந்தது. அணையில் இருந்த தண்ணீரும், சேறும் சகதியுமாக பெருக்கெடுத்து வெளியேறியது. இதில் ஏராளமான தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். அணை வளாகத்தில் இருந்த உணவகம் சகதியில் முழுவதும் புதைந்தது.

இதுதவிர அணையை ஒட்டியுள்ள பகுதியில் இருந்த நிறுவனங்கள், தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளில் பெருமளவிலான சகதி நிரம்பியதால், அவர்களின் வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்தன.

இந்த விபத்து பற்றி தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ ...
ஈடுபட்டு வரு...
வீதிகள் ...
சகதியில் சிக்...
மூலம் மீட்க...
அங்கு வசி...
னர்.
உள்ளூ...
மாலை வெ...
விபத்தில் உ...
மேலும், தெ...

# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு பாய்ந்தோடிய நெருப்புக் குழம்பு



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் கொந்தளிப்பான மவுண்ட் மிராபி எரிமலை வெடித்துச் சிதறியதால் அம்மலையிலிருந்து பொங்கிய லாவாக் குழம்பின் நெருப்பு வெள்ளம் 1400 மீற்றர் (4590 அடி) தூரத்திற்கு பாய்ந்தோடியது.

இந்தோனேசியாவைச் சேர்ந்த ஜாவா தீவில் மிராபி எரிலை சில நாட்களாக வெடிக்கும் நிலையில் இருந்ததாக இந்தோனேசியாவின் எரிமலை மற்றும் புவிசார் ஆபத்துத் தடுப்பு மையத் தலைவர் கஸ்பாணி தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இந்த எரிமலை பொங்கியது. அதன் பிறகு நேற்று முன்தினம் மாலையிலிருந்தே எரிமலை பொங்கத் தொடங்கியது. அதிலிருந்து வெளியேறிய லாவாக்குழம்பின் நெருப்பு வெள்ளம் பெருகி ஓடியது.

நேற்று முன்தினம் எரிமலை வெடிப்பதற்கு முன்பு எச்சரிக்கை விடுக்கப்படவில்லையே தவிர, மற்றபடி எரிமலைவெடிக்கும் அபாயகரமான 3 கிலோ மீற்றர் சுற்றுப்பகுதி தொலைவுக்கு அப்பால் மக்கள் வெளியேற்றப்பட்டுவிட்டனர்.

2,968 மீற்றர் உயரமுள்ள மிராபி எரிமலை, பழங்கால இந்தோனேசிய நகரமான யோக்யாகர்ட்டாவின் அருகே அமைந்துள்ளது. இந்தோனேசியாவில் உள்ள டசின்கணக்கான எரிமலைகளில் நெருப்பு கனன்று கொண்டிருக்கும் நிலையில் தான் உள்ளது. (4-7)

# என்னைக் கொலை செ...

## வெனிசுவெலா ஜனாதிபதி குற்றச்சாட்டு



(கராகஸ்)

என்னைக் கொலை செய்யும்படி கொலம்பியா அரசு மற்றும் கொலம்பியாவைச் சேர்ந்த கொலைகார கும்பல்களுக்கு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளதாக நிக்கோலஸ் மதுரோ குற்றம் சாட்டியுள்ளார்.

வெனிசுவெலாவில் நிலவும் அரசியல் குழப்பத்துக்கு அமெரிக்காதான் காரணம் என குற்றம் சாட்டி வரும் அந்நாட்டின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்கா உடனான அனைத்து உறவுகளையும் முறித்துக் கொள்வதாக அண்மையில் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து நிக்கோலஸ் மதுரோவுக்கு மேலும் அழுத்தம் தரும் வகையில் அந்நாட்டின் அரசு எண்ணெய் நிறுவனம் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது.

இந்த நிலையில், தன்னை கொலை செய்ய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளதாக நிக்கோலஸ் மதுரோ பரபரப்பு குற்றம் சாட்டினார் ...
நிறுவனம் ஏ...
இதுபற்றி அ...
என்னை...
பியா அரசு ...
கொலைகா...
விட்டுள்ளார் ...
பதில் சந்தேக...

# பாக். ஆதரவு பயங்கரவாதக் குழுக்கள் இந்தியாவில் தாக்குதலைத் தொடரும்



(வோஷிங்டன்)

பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளால் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானில் தாக்குதல்கள் தொடரும் என அமெரிக்காவின் உளவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தேசிய உளவுத்துறை இயக்குநர் டான் கோட்ஸ், உளவுத்துறைக்கான செனட் தேர்வுக் குழுக' கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது, உலகளாவிய அளவில் பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பாக அவர் தெரிவித்ததாவது.

ஆப்கானிஸ்தானில் ஜூலையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளதாலும், தலிபான்களின் பெரும் தாக்குதல் காரணமாகவும் தெற்கு ஆசியாவில் பெரும் சவால்கள் 2019இல் இருக்கும்

பாகிஸ்தான் அரசு பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் குறுகிய எண்ணத்துடன் செயற்படுவதாலும், பயங்கரவாத அமைப்புக்களை தன்னுடைய கொள்கை முடிவுகளின் ஆயுதங்களாக பயன்படுத்துவதாலும் பயங்கரவாத அமைப்புகளின் எச்சரிக்கை நேரடியாகவே உள்ளது.

பாகிஸ்தானின் இது போன்ற செயற்பாடு பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் நடவடிக்கையில் பாதிப்பை உண்டாக்கும். பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவு அளிப்பது, அவை பாதுகாப்பு புகலிடங்களை விஸ்தரிக்க வகை செய்கிறது.

இந்த பயங்கரவாத இயக்கங்கள் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானில் தாக்குதலை நடத்தும். அமெரிக்க நலன்களுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

# ஏவுகணைச் சோதனையில் சீனா வெற்ற...



சீனாவினால் முன்னெடுக்கப்பட்ட ஏவுகணைச் சோதனைக்கு அமெரிக்... ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஒலியை விட அதிக வேகமாக அணுவாயுதங்களைச் சுமந்து செல்ல... ஏவுகணையை கடந்த செவ்வாய்க்கிழமை சீனா மீண்டும் வெற்றிகரமா... சோதனை செய்துள்ளது.

டி.எப். 26 என்று பெயரிடப்பட்ட அந்த ஏவுகணை ஏவப்பட்ட இடத்திலிரு... நிர்ணயிக்கப்பட்ட இலக்கை துல்லியமாகக் தாக்கியது.


3 ஆயிரம் கிலோ மீற்றர் முதல் 5 ஆயிரத்து 700 கிலோ மீற்றர் தூ... பறந்து சென்று தாக்கும் இந்த ஏவுகணை மூலம் அமெரிக்காவின் எ... நகரத்தையும் தாக்கும் வல்லமையை சீனா பெற்றுள்ளது.

தரையிலிருந்து கனரக வாகனங்கள் மூலமும், விமானத்தில் எடுத்... சென்றும் டி.எப்.26 ஏவுகணையை செலுத்த முடியும். (4-

# வெளிநாடு



# ணை உடைப்பு 0 ஆக உயர்வு!



ர் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்புப் பணியில் டுபட்டு வருகின்றனர்.

வீதிகள் சேதமடைந் ததால், அப்பகுதியில் தியில் சிக்கிய பொது மக்கள் ஹெலிகொப்டர் லம் மீட்கப்பட்டனர். பாதுகாப்பு காரணமாக ங்கு வசிக்கும் பலர் வெளியேற்றப்பட்ட ர்.

உள்ளூர் ஊடகத்தில் நேற்று முன்தினம் லை வெளியான தகவலின்படி, அணை பத்தில் உயிரிழப்பு 100 ஆக உயர்ந்துள்ளது. லும், தொழிலாளர்கள், ஒப்பந்ததாரர்கள், பொது மக்கள் என 259 பேரைக் காண வில்லை என அதிகாரிகள் கூறியுள்ளனர். உயிரிழந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மற்றவர்களையும் அடையாளம் காணும் பணி நடைபெறுகிறது.

காணாமல் போனவர்களில் பெரும்பாலானோர் சேறு சகதிக்குள் சிக்கியிருக்கலாம் என்பதால் உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மீட்புப் பணி நடைபெறுகிறது. அணையில் இருந்து பெருக்கெடுத்து ஓடிய சேறு சகதியுடன் கூடிய சுரங்க கழிவுநீரானது, அருகிலுள்ள பராபிபா ஆற்றில் கலந்துள்ளதால் ஆற்று நீரும் மாசடைந்துள்ளது. ஏராளமான மீன்கள் இறந்து மிதக்கின்றன. (4-7)

# செய்ய ட்ரம்ப் உத்தரவு!



ட்டினார். ரஷ்யாவைச் சேர்ந்த செய்தி றுவனம் ஒன்றுக்கு அளித்த சிற ப்புப் பேட்டியில் துபற்றி அவர் தெரிவித்ததாவது.

என்னைக் கொலை செய்யும்படி கொலம் பா அரசு மற்றும் கொலம்பியாவைச் சேர்ந்த காலைகார கும்பல்களுக்கு ட்ரம்ப் உத்தர ட்டுள்ளார் என் ல் சந்தேகமே இல்லை. ஒரு நாள் எனக்கு ஏதாவது நடக்கலாம். எனக்கு என்ன நேர்ந்தாலும் அதற்கு ட்ரம்ப் மற்றும் கொலம்பியா ஜனாதிபதி இவான் டியூக் தான் பொறுப்பாவார் கள் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தலைநகர் கராகஸில் நடந்த இராணுவ தின நிகழ்ச்சி யின் போது, ஆளில்லா விமானங்கள் மூலம் ஜனாதிபதி நிக்கோலஸ் மது ரோவை கொல்ல முய ற்சி நடந்தது குறிப்பிடத்தக்கது. (4-7)

## வெற்றி



அமெரிக்கா.

து செல்லும்

ற்றிகரமாகச்

த்திலிருந்து

ீற்றர் தூரம்

ாவின் எந்த

ில் எடுத்துச்

(4-7)

# அடுக்கு மாடியில் தீ 8 பேர் உயிரிழப்பு



சீனாவின் ஜிலின் மாகாணத்தில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் எரிவாயு கசிவால் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. குறித்த தீ விபத்தில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் ஜிலின் மாகாணத்தில் உள்ள சாங்வான் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று முன்தினம் அதிகாலை குறித்த குடியிருப்பின் நான்காவது மாடியில் சமையல் எரிவாயு கசிந்து திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

குறித்த தீ விபத்தில் சிக்கி 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என்றும், 3 பேர் படுகாயம் அடைந்தனர் என்றும் தீயணைப்பு துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தீ விபத்து குறித்து முதல் கட்ட விசாரணை நடந்து வருகிறது. (4-7)

# அமெரிக்காவில் சுழல்சுற்று ஏழு பேர் உயிரிழப்பு



அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவை தொடர்ந்து வீசும் துருவ சுழல்காற்றினால் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 20 வருடங்கள் இல்லாத அளவுக்கு கடுமையான குளிர் நிலகின்ற நிலையில், தற்போது அதிக குளிரைக் கொண்ட துருவ சுழல் காற்று வீசியுள்ளது.

சிக்காகோவில் மறை 30 பாகை செல்சியஸாக குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது. வடக்கு டகோடாவில் 37 பாகை செல்சியஸ் குறைவான வெப்ப நிலை பதிவாகியுள்ளது.

அதிகரித்த உறைபனியால் சுமார் 250 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 9 மில்லியன் மக்கள் 17 பாகை செல்சியஸ் அல்லது அதற்கும் குறைவான வெப்பநிலையில் வாடுவதாக அந்நாட்டு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் வயது முதிர்ந்தவர்கள் ஆவர். அத்தோடு, காரில் பயணித்துக்கொண்டிருந்த இளம் தம்பதியினர் வீதியில் காணப்பட்ட பாரிய பனிக்கட்டியில் மோதி விபத்திற்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

பனியிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளும் பொருட்டு மக்களை வெளியே செல்லவேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் கம்பளி போர்வைகளை போர்த்தியும், சூடான பானங்களை அருந்தியும், தீ மூட்டியும் தமது குளிரைத் தணித்துக்கொள்கின்றனர்.

சைபீரியாவில் நிலவுவதைப் போன்று கடுமையாக இந்த குளிர்காற்று வீசுவதோடு, வீதிகளில் பனிக்கட்டிகள் நிறைந்துள்ளன. இதனால் வாகன சாரதிகளை மிகவும் அவதானமாக செயற்படுமாறு வானிலை அவதான மையம் அறிவுறுத்தியுள்ளது. (4-7)

# பிரேசில் அனர்த்தத்தில் சிக்கிய சிறுமி உயிருடன் மீட்கப்பட்டார்

பிரேசில் அணை உடைப்பெடுத்து ஏற்பட்ட அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில், சிறுமியொருவர் தெய்வாதீனமாக உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

அனர்த்தத்தில் காணாமல் போன தனது தங்கையை உயிருடன் மீட்கும் முயற்சியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட ஒரு சகோதரனாலேயே குறித்த சிறுமி மீட்கப்பட்டுள்ளார். மீட்கப்பட்டவர் 15 வயதுடையவர் எனத் தெரி விக்கப்படுகிறது.

சேற்றுக்குள் உயிருக்காக போராடிக் கொண்டிருந்த சிறுமியை கண்டவர்கள் உடனடியாக மீட்பு பணியாளர்களுக்கு இது குறித்து அறிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து ஹெலிகொப்டர் மூலம் சம்பவ இடத்திற்கு வந்த மீட்புப் பணியாளர்கள், குறித்த சகோதரன் மற்றும் அவரது நண்பரின் உதவியுடன் சிறுமியை பாதுகாப்பாக மீட்டுள்ளனர். (4-7)

# அவுஸ்திரேலியாவில் காட்டுத்தீ!



அவுஸ்திரேலியாவில் வேகமாகப் பரவிவரும் காட்டுத்தீயை கட்டுப்படுத்த சர்வதேச உதவியை கோருமாறு பிரதமர் ஸ்கொட் மொறிசனை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். டஸ்மேனியா மாநிலத்தின் நிலைமை நேற்று முன்தினம் புதன்கிழமை மிகவும் மோசமடைந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்காக சுமார் 500 இற்கும் அதிக மான தீயணைப்பு வீரர்கள் கடு மையாக போராடி வருகின்றனர்.

தீப்பரவல் தீவிரமடைந்து வருகின்ற நிலையில், தம்மையும், தமது சொத்துக்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு அரசாங்கத்தின் வழிமுறைகளை பின்பற்றுமாறு மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

டஸ்மே னியா பிரதமர் வில் ஹொட்ஜ்மன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

காட்டுத்தீயை அடுத்து மாநிலம் முழுவதும் 14 அவசரகால எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# ஜீவான் கெய்டோ அச்சுறுத்தப்பட்டால் கடுமையான விளைவை சந்திக்க நேரிடும்

## அமெரிக்கா மீண்டும் மிரட்டல்



வெனிசுவெலாவின் எதிர்த்தரப்புத் தலைவர் ஜுவான் கெய்டோ அச்சுறுத்தப்பட்டால், அந்நாடு கடுமையான பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்ட்டன் எச்சரித்துள்ளார்.

வெனிசுவெலா எதிர்த்தரப்புத் தலைவர் கெய்டோவுக்கு அமெரிக்கா வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அதன்மூலம்வெனிசுவேலாவின் தற்போதைய ஜனாதிபதி நிக்கலோஸ் மதுரோ பதவி விலக வேண்டும் என்ற நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் குழப்பம் நிலவும்வெனிசுவெலாவுக்குச்செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அமெரிக்கா தனது குடிமக்களைக் கேட்டுக் கொண்டது.

இந்நிலையில், வெனிசுவெலா எதிர்த்தரப்புத் தலைவர்ஜுவான்கெய்டோநாட்டை விட்டு வெளியேற அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அவருடைய வங்கிக் கணக்குகளையும் நீதிமன்றம் முடக்கியுள்ளது.

கடந்த வாரம், வெனிசுவெலாவின் இடைக்கால ஜனாதிபதியாக ஜுவான் கெய்டோ தம்மை அறிவித்துக் கொண்டார். அதையடுத்து வெனிசுவெலாவில் அரசியல் நெருக்கடி நீடிக்கும் சூழலில் உச்ச நீதிமன்றம் ஜுவான் கெய்டோ மீது நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவும், பிற நாடுகளும் ஜுவான் கெய்டோவை ஆதரிக்கின்றன. இதேவேளை ரஷ்யா உட்பட சில முக்கிய நாடுகளுடன் ஜனாதிபதி நிக்கலோஸ் மதுரோவுடன் நெருக்கமாக இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## சிறைவாசம் அனுபவிக்கும்

# ஞானசார தேரரை விடுதலை செய்க

### ஜனாதிபதியிடம் ரத்ன தேரர் கோரிக்கை



(கொழும்பு)

நீதிமன்றத்தால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வரும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்வதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேசிய சுதந்திர தினத்தன்று ஜனாதிபதியினால் வழங்கப்படும் சிறைக் கைதிகளுக்கான பொது மன்னிப்பின் போது ஞானசார தேரரையும் இணைத்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியின் அமைச்சரவை யோசனை வெற்றி பெறுமா?

### ஜோன் செனவிரத்ன கேள்வி



(கொழும்பு)

மாகாணசபை தேர்தலை புதிய முறையில் மாத்திரமல்ல தேர்தலையே நடத்தாமல் இருக்கவே ஐக்கிய தேசிய கட்சி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மே மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் அனைத்து மாகாணங்களுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி முன்வைத்த பிரேரனை அமைச்சரவை யோசனைக்கு எடுக்குக் கொள்ளப்படுமா என்பது சந்தேகத்திற்கிடமானது என பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7-8)

# பழையமுறையில் தேர்தலை நடத்துவதாயின் சட்டமூலத்தை அவசரமாக நிறைவேற்றவும்

### ஜயம்பதி கோரிக்கை



(கொழும்பு)

மாகாணசபைகள் ஒன்பதுக்குமான தேர்தல்களை விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நடத்த அனைத்து கட்சிகளும் தனது விருப்பத்தினை வெளியிட்டுள்ளன. அவ்வாறு விகிதாசார முறையில எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால், பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கான சட்ட மூலத்தை உடனடியாக பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்தார்.

மீண்டும் பழைய முறைமைக்கு தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது பெண் பிரதிநிதிகளை தெரிவு செய்வது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களும் விகிதாசார தேர்தல் முறையில் மாகாணசபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு தனது விருப்பத்தினை வெளியிட்டுள்ள நிலையில், மாகாண சபை தேர்தலுக்கான அரசாங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7-8)

# கடற்படைத்தளபதி -பாக். உயர்ஸ்தானிகர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஷஹீட் அஹமட் ஹஷ்மட் நேற்று முன்தினம் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பியல் த சில்வாவை கடற்படை தலைமையகத்தில் வைத்து சந்தித்து கலந் துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல் வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந் நிகழ்வில் இலங்கையின் பாகிஸ்தான் உயர் ஆணையகத்தின் பாதுகாப்பு ஆலோசகரான கர்னல் சஜாட் அலி கலந்து கொண்டுள்ளார். (7-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனச் சோர்வு

வரவர என்பேரிலேயே எனக்கு நம்பிக்கை இல்லைசோ! அப்படி என்று ஒருத்தர் சொன்னார்.

சரி..சேர் வேதாந்தியா ஆகிவிட்டார் போல இருக்கிறது என்று நாம் நினைத்து விடக் கூடாது!

அவருக்கு தன்னம்பிக்கை குறைய ஆரம்பித்து இருக்கின்றது என்று அர்த்தம். அது மிகவும் ஆபத்து! அதை அப்படியே விட்டு விடாது! உடனடியாகப் பரிகாரம் தேட வேண்டும்!

இன்றைக்கு பலபேருக்கு மனம் சுலபமாக ஓய்ந்து போய்விடுகின்றது! எதைப் பார்த்தாலும் அலுப்பாக இருக்கிறது, அயர்வாக இருக்கிறது! எதிலேயும் கலந்து கொள்கிறதில் ஒரு உற்சாகம் இல்லை!மனச் சோர்வு வந்து விடுகின்றது!

மனச் சோர்வு தீர்வதற்கு மருந்து என்ன?

உடனே அந்த மருந்து எந்த கடையிலே கிடைக்கும் சொல்லுங்கள்! என்று காசை எடுத்துக் கொண்டு சட்டையை மாட்டிக் கொண்டு வெளிக்கிடாதீர்கள்.!

மருந்து கடையிலே இல்லை... நம்மிடையே இருந்தால் எனக்கும் கொஞ்சம் கொடுத்துட்டுப் போங்களேன் ... ம் பார்! ஏன் என்றால் இதுக்கு அவ்வளவு டிமாண்ட் இருக்கு. இப்பொழுது சரி... நான் விடயத்திற்கு வருகின்றேன்! சுலபமாக முடியக் கூடிய காரியம் தான்! கொஞ்சம் முயற்சி செய்து பார்ப்போமே!

ஆள் பாதி– ஆடை பாதி என்று சொல்கிறோம் அல்லவா.. அது கூட சரியில்லை.. ஆள் கால்– ஆடை முக்கால் –இது தான் சரி...

நல்ல துணிமணிகள் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவுகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்! அதனால் முடிந்த அளவுக்கு நன்றாக ஆடை அணிய வேண்டும். அப்புறம் நிறைய விடயங்களை தெரிந்து வைத்திருக்க வேண்டும். அது உபயோகப்படுகிறதா? இல்லையா என்பதைப் பற்றி கவலை இல்லை! இது தன்னம்பிக்கையை வளர்க்கும் என்று ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபணமாகியிருக்கின்றது! ஒவ்வொருநாளும் புதிதாக ஒரு விடயத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு சபதம் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒரு முக்கிய விடயம்!

உங்களை யாராவது அலட்சியமாக நினைப்பது போல தெரிகின்றதா?

அவர்கள் பக்கம் தலைவைத்துக்கூட படுக்க வேண்டாம்.

உங்களை யாராவது மட்டம் தட்டுகிறார்களா... உங்கள் மனது சோர்ந்து போகிற மாதிரி யாராவது நடந்து கொள்கின்றார்களா...

அவர்களையெல்லாம் உதறித் தள்ளுங்கள்! இரக்கமே காட்டாதீர்கள்! என்ன சேர் அவங்க மட்டும் ஒசத்தி... எல்லாரும் ஒரே மாதிரி தான் இந்த உலகத்திலே பிறந்திருக்கின்றோம்! அதனால் அலட்சியப்படுத்துகின்றவர்களை மனதார அலட்சியப்படுத்திப் பாருங்க!அப்புறம் நீங்கதான் ராஜா!

உங்களுக்கே பிடிக்காதது ஏதாவது உங்களிடம் இருப்பதாக தெரிகிறதா? பரவாயில்லை... உடனே ஒதுக்கித் தள்ளுங்கள். அதை!உங்களுடைய எடையை குறைக்க வேண்டுமா... உடற்பயிற்சி ஆரம்பிக்க வேண்டுமா! குடிப் பழக்கத்தை நிறுத்த வேண்டுமா...

எதுவாக இருந்தாலும் உடனே நடவடிக்கை எடுங்கள்! ஒத்திப் போட வேண்டாம்!

உங்களை வேதனைப்படுத்துகின்ற விடயம் எதுவாக இருந்தாலும் சரி அதைப் பற்றி பேசுவதை உடனே நிறுத்துங்கள்!உங்களாலே சீர் செய்ய முடியாதது சிலது இருக்கும்... அதையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்வது தான் நல்லது!

உயரம் ஆறு அடி இருக்கின்றேன்.. அதை நாலு அடியாக குறைத்தால் தேவையில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது! அது எப்படி முடியும்! fresh ஆக செய்ய முடியும்.?

சொந்தக்காரர்கள் இப்படி இருக்கின்றார்களே என்ற கவலை சிலபேருக்கு இருக்கும்... அவர்கள் அப்படித் தான் ... அதோட விட்டுடுங்க! உங்களிடம் நிவர்த்தி செய்ய முடியாத குறைகள் சிலது இருக்கலாம்... அப்படிப்பட்ட குறையோட வாழ்க்கையிலே முன்னுக்கு வந்தவர்களை பற்றி தெரிந்து கொண்டு அவர்கள் செய்த சாதனைகளை நினைத்துப் பாருங்கள்! அது உங்களை உற்சாகப்படுத்தும்!

உங்களுக்கு என்று ஒரு தனித்தன்மை ஏதாவது இருக்கும். அது எது என்று புரிந்து கொண்டு முழுதாக மனதை அதிலே செலுத்துங்கள்! உங்களுக்கு என்று ஏதாவது ஒரு சிறப்பு அம்சம் இருக்கும்... அழகான கண்– கறுப்பான கூந்தல்– நீளமான விரல்– லேசான புன்னகை நுட்பமான புத்திசாலித்தனம் இப்படி ஏதாவது இருக்கும்...

அதை மெதுவாக கண்டுபிடிக்கனும்...

அதை சிறப்பா வெளிப்படுத்தனும் ... அது பற்றிய உணர்வோட இருக்கனும்.

எப்பவாவது மனம் சோர்ந்து போனா உங்க தனித் தன்மையிலே மனதை செலுத்துங்கள்.. சரியாகப் போயிடும்!

மிகவும் கட்டுப்பாடாக இருக்கிறவர்கள்.. மிகவும் ஆர்ப்பாட்டமா இருக்கிறவர்கள்..

இவர்கள் எல்லாம் உள்ளூர குமைஞ்சிட்டு இருக்கிறவர்களா இருப்பார்களாம்!

சேர் ஒரு ரகசியம்.. உங்களை சுற்றி இருக்கிறவர்கள் எல்லாம் மிகவும் தன்னம்பிக்கை உள்ளவர்கள் என்று நினைத்து விடாதீர்கள்! அவர்களுக்கும் உள்ளுக்கு உள்ளே உதறல் தான் வெளியிலே நடித்துக் கொண்டிருப்பார்கள்!

உங்களுக்கு வயிற்றிலே புளியைக் கரைச்சா .. அவங்களுக்கு பெருங்காயத்தை கரைச்சது மாதிரி இருக்கும். அவ்வளவு தான்!

அச்சம் தேவை தான்... ஆனா... அதை வெளியே காட்டிக் கொண்டிருக்கக்கூடாது!

மிகவும் அடக்கமாக இருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்காதீர்கள். வெளியிலே வாருங்கள். தன்னம்பிக்கையோடு இருக்க வேண்டுமென்று காட்டிக் கொள்வதற்காக கொஞ்சம் நடிக்கிறதிலே கூட தவறு இல்லை!

தினமும் ஒரு விடயத்தை நிறைவாக செய்யுங்கள்! அது சாதாரண அற்ப விடயமாக இருந்தால் கூட எடுத்த காரியத்தை சிறப்பாக முடிக்கனும்!

அது ஒரு மன நிறைவை கொடுக்கும்!

மனது சோர்வு நீங்குவதற்கு .. ஆராய்ச்சியாளர்கள் சொல்லி வைத்திருக்கின்ற வழிமுறைகளையெல்லாம் இப்ப உங்களிடம் சொல்லிவிட்டேன்.

இதற்குப் பதிலா நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும். இந்த வழிமுறைகளையெல்லாம் கடைப்பிடித்து பார்த்துவிட்டு அதிலே பலன் கிடைத்தது என்றால் ஒரு வரி எழுதிப் போடுங்கள்!


ஏன்னா– அதுக்கு பிறகு தான் நான் ஆரம்பிக்க வேண்டும்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

159



கல்விக் கண்ணோட்டத்துடன் பார்க்கையில் அவர்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறின என்பதில் நிச்சயமாகச் சந்தேகமேயில்லை. தமிழ்ச் சமூகத்திலுள்ள சாதாரண மாணவர்களுக்கும் கல்வி பெற்றவர்களுக்கும் மத்தியில் காணப்பட்ட கல்வி ரீதியான இடைவெளியை இப்பத்திரிகை பாராட்டும் வகையில் நிரப்பியதோடல்லாமல் தமிழருக்கும் ஐரோப்பியருக்கும் இடையிலான இடைவெளியையும் நிரப்பியது.

இருந்தபோதிலும், மோணிங் ஸ்ராரின் தமிழ்ப் பத்திராதிபர்கள், அர்ப்பணிப்பு மிக்க புரட்டஸ்தாந்தினராக இருந்தனால், தங்களுடைய பதவியைத் தமிழர் மத்தியில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

இதேவேளை, புரட்டஸ்தாந்தினர் வேதாகமத்தை மொழி மாற்றம் செய்து தமிழர் மத்தியில் விநியோகிக்கப் பெருமுயற்சி செய்தனர்.

வேதாகமத்தை வாசிப்பவர்கள் உண்மைகளை உணர்ந்து தீமைமையைப் புறந்தள்ளி தமது ஒழுக்க நடத்தைகளில் சீர்திருத்தம் பெறுவார்கள் என மோணிங் ஸ்ரார் பத்திராதிபர்கள் திடமாக நம்பினர்.

இந்தப் புரட்டஸ்தாந்து பத்திராதிபர்கள், சைவசமயிகள் தமது புனித ஆகமங்களை வெளிப்படையான பொது ஆய்வுக்கும் தீர்ப்புக்கும் விட வேண்டுமென இடையறாது சவால் விடுத்தனர்.

எனவே மோணிங் ஸ்ரார் பத்திரிகையானது தனது பிரகடனப்படுத்தப்பட்ட கல்வி நோக்கங்களுடன், புரட்டஸ்தாந்தை மேம்படுத்துவதற்காகச் சைவசமயத்தையும் அதன் கோட்பாடுகளையும் இழிவு செய்யவும் முன்வந்தது.

இப் பத்திரிகையில் உள்ள ஒரு பத்திரிகையாளருடைய கூற்று இவ்வகையான செயல்களுக்கு உதாரணமாக உள்ளது.

சைவசமயத்தின் விநோதமான கோட்பாடுகளிலும் எண்ணங்களிலும் மனிதனொருவனின் ஒழுக்க நடத்தையைச் சீர்பெறச் செய்யவோ, பிறர்க்குரியாளனாக அவனை ஆக்குவதற்கோ ஒன்றுமேயில்லை.

> “சைவசமய வாழ்வின் பாரம்பரிய அம்சங்களாக இருந்ததுடன் குடும்பத் தின் நாளாந்த வாழ்வின் இணை ந்ததொரு பாகமாகவும் இருந் தன. 1846 ஒக்டோபர் 22 ஆம் திகதி மோணிங் ஸ்ரார் இந்த சைவசமயச் செயற் பாடுகளைக் கேலிக்குரியவை எனக் கண் டனம் செய்தது. சைவசமய த்தின் படி மனித ருக்கு நித்திய வாழ்வைச் சிவபெருமான் அருளு வார் என்ற சைவசமயிக ளின் நம்பிக்கையை யும் இது பரிகசித்தது”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

உலகம் முழுவதுமே சைவ சமயத்தைத் தழுவிக் கொண்டால் மக்களின் ஒழுக்கத்திலோ, மகிழ்ச்சியிலோ எவ்வித முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது.

ஒவ்வொரு மனிதனும் பெரும் பொய்யனாய், ஏமாற்றுக் காரனாக இருப்பதுடன் பிறன் மனை விழைபவனாகவும் ஏழைகளைத் துன்புறுத்துபவனாகவும் பேராசை, அகங்காரம் கொண்டவனாகவும் முன்பு எவ்வாறு பரிசுத்தமான விசுவாசம் இல்லாதிருந்தானோ அப்படியே இப்போதும் இருப்பான்.

புரட்டஸ்தாந்து மிஷனரிமார் சைவசமயக் கோட்பாடுகளை இழிவுபடுத்தியதுமல்லாது, அதன் தெய்வங்கள், சடங்குகள் கோவில்கள் யாத்திரைகள் திருநீறு அணிதல், கோவில்களில் புனித நூல்கள் பாராயணம் செய்தல், விரதமிருத்தல் என்பவற்றைத் தாழ்த்தி விமர்சிக்கவும் செய்தனர்.

இச் செயல்கள் சைவசமய வாழ்வின் பாரம்பரிய அம்சங்களாக இருந்ததுடன் குடும்பத்தின் நாளாந்த வாழ்வின் இணைந்ததொரு பாகமாகவும் இருந்தன.

1846 ஒக்டோபர் 22 ஆம் திகதி மோணிங் ஸ்ரார் இந்த சைவசமயச் செயற்பாடுகளைக் கேலிக்குரியவை எனக் கண்டனம் செய்தது. சைவசமயத்தின் படி மனிதருக்கு நித்திய வாழ்வைச் சிவபெருமான் அருளுவார் என்ற சைவசமயிகளின் நம்பிக்கையையும் இது பரிகசித்தது.

இயேசு கிறிஸ்துவினூடாக மட்டுமே இரட்சிப்புக்கு இட்டுச் செல்லும் மார்க்கம் உண்டென இப் பத்திரிகை தொடர்ந்து போதித்தது.

இதே வருடத்தில் இந்துமத மறுப்பு எனும் தலையங்கத்தின் விக்கிரக வணக்கத்தையும் கோவில் திருவிழாக்களையும் கோவில் நடனங்களையும் பக்தர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் வழங்கப்படுவதையும் கடுமையாகக் கண்டனம் செய்தது.

யாழ்ப்பாணத்திலே பிரபலமாயிருந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் அனுட்டானங்களையும் மோணிங் ஸ்ரார் கடுமையாக விமர்சித்தது. அத்துடன் ஏனைய மதச் சடங்குகள் மற்றும் நடவடிக்கைகளான காவடி எடுத்தல் மேளதாளம், சுவாமி கும்பிடுதல் என்பனவற்றையும் கண்டனம் செய்தது.

சைவசமய வழிபாட்டுக்காரர் கட்டுப்பாடற்றவர் என்றும் கோவிலில் அவர்கள் வேண்டுமென்றே பிறரின் கவனத்தைத் திசை திருப்புபவர்கள் என்றும் குறிப்பாக இளைஞர் பெண்களைப் பாலீயல் ரீதியாக சிரமப்படுத்துபவர்கள் என்றும் மோணிங் ஸ்ரார் தொடர்ந்து எழுதியது.

ஓ ! இருளில் வாழும் இந்த மக்களின் பைத்தியந்தான் என்னே. தமது மூடத்தனமான சடங்கு, விழாக்களை இவர்கள் சாத்தானுக்கு நடத்தும் அதே வேளை கோவிலில் எல்லா வகைப் பாவங்களிலும் ஈடுபட்டு மகிழ்கின்றனரே.

தயவு செய்து இந்தப் பைத்தியக்காரத்தனத்தையும், மூடத்தனத்தையும் விடுத்து உண்மையாகிய தேவனாகிய இயேசுவிடம் வந்து உங்கள் இரட்சிப்புக்காகப் பிரார்த்தியுங்கள்.

இவ்வாறு சைவசமயத்திற்கு எதிராகக் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கான தீவிரமான பிரசாரத்தை மோணிங் ஸ்ரார் மேற்கொண்டது.

(தொடரும்)

# சட்ட கட்டமைப்பைத் தயார் செய்தால் மாகாணத் தேர்தலை நடத்த முடியும்

## அமைச்சர் சுஜீவ தெரிவிப்பு



(கொழும்பு)

சட்டக் கட்டமைப்பை தயார் செய்தால் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த முடியும் என அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சட்டக் கட்டமைப்பு என்ற ஒன்று இருந்தால் தேர்தல்கள் நடத்தப்பட்டிருக்கும்.

தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல் நடத்தப்படாது விட்டால் பதவி விலகுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவித்தமை தொடர்பில் இதன் போது கருத்து வெளியிட்ட அமைச்சர், அவர் பதவி விலகினால் அந்த இடத்திற்குப் புதிதாக நியமிக்கப்படுவரும் நெருக்கடி நிலைமைக்கே முகம் கொடுக்க வேண்டிவரும் எனவும் தெரிவித்தார். (7-8)

# அனைத்துலக உறவுகளுக்கான நிலையம்; ஆவணங்களில் மகிந்த கையெழுத்து



(கொழும்பு)

அனைத்துலக உறவுகளுக்கான மகிந்த ராஜபக்ஷ நிலையத்தை உருவாக்கும் முயற்சிகளில் முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ இறங்கியுள்ளார்.

அனைத்துலக உறவுகளுக்கான மகிந்த ராஜபக்ஷ நிலையத்தை உருவாக்குவதற்கான ஆவணங்களில், மகிந்த ராஜபக்ஷ கடந்த 29 ஆம் திகதி கையெழுத்திட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் பங்கேற்றுள்ளார்.

அனைத்துலக உறவுகள், இராஜதந்திரம் மற்றும் வெளிவிவகாரக் கொள்கைக்கான உலகத்துக்குள் நுழைவதற்காக முதல்படியாக இந்த நிறுவகம் இருக்கும் என்று மகிந்த ராஜபக்ஷ தனது கீச்சகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.(7-8)

# மாணவர்களுக்கு நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

கல்விக்குத் தோள்கொடுப்போம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நல்லூர் நொதோன் விளையாட்டுக்கழக உறுப்பினரும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமாகிய தெ.கிரிதரனின் சிபார்சுக்கு அமைய அவ் வட்டாரத்தில் கற்றலுக்கு இடர்படும் மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் நடவடிக்கையை தடையின்றி தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காகவும் அவர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும் ஞானபாஸ்கரோதய கலாசார ஒன்றியத்தின் கனடா இணைப்பாளர் சி.பரஞ்சோதியின் அனுசரணையுடன் ஐந்து மாணவர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 700 ரூபா வீதம் 6 மாத காலத்திற்கான கொடுப்பனவான 51 ஆயிரம் ரூபா மாணவர்களுக்கு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் நிகழ்வின் போது நல்லூர் பிரதேச சபை உறுப்பினரால் வழங்கப்பட்டது.(இ-9)

# புதிய ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு



(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகக் கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து மீண்டும் புதிய ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடுவதற்குச் சகல தொழிற்சங்கங்களும் ஓரணியில் திரள வேண்டும் என்று தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எஸ்.இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தில் பல்வேறு குளறுபடிகள் காணப்படுவதால், அதில் கைச்சாத்திடவில்லை என்று தெரிவித்த அவர், முதலாளிமார் சம்மேளனம் 85வீத தொழிலாளர்களின் வயிற்றிலடித்துவிட்டதாகவும் குற்றம் சாட்டினார்.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மூன்றாவது தொழிற்சங்கமான தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு இம்முறை அதில் கைச்சாத்திடவில்லை. அதற்கு முக்கியமாக மூன்று காரணங்கள் உள்ளதாகத் தெரிவித்த இராமநாதன், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட இரண்டாண்டு காலப்பகுதிக்குள் திருத்தங்களைச் செய்த சந்தர்ப்பம் இதற்கு முன்னர் ஏற்பட்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, தற்போது முன்வைக்கப்படும் விமர்சனங்கள், குறைபாடுகள் தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி, உடன்படிக்கையை மீளப்புதுப்பிக்க வேண்டும் என்பதே தமது சங்கத்தின் நிலைப்பாடாகும் என்று தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது பற்றிக் கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது, உடன்படிக்கையின் நகல் வரைவொன்றைச் சங்கங்களுக்கு அனுப்புவதாக முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்திருந்தது. அதன்படி, சனிக்கிழமை கிடைக்கப்பெற்ற உடன்படிக்கை நகலில், பல்வேறு குளறுபடிகள் காணப்பட்டதாகவும் அதனைப் பார்த்த பின்னரே உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில்லை என்று முடிவுசெய்ததாகவும் தெரிவித்தார். (இ-7)

# தனிப்பட்ட வாழ்க்கை முறையில் அரசியல் தடையாக இருக்காது

## யோஷித கூறுகிறார்



(கொழும்பு)

அரசியலில் பரஸ்பர கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் தனிப்பட்ட வாழ்க்கையில் அது தடையாக இருக்காது என யோஷித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அப்போது செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த யோஷித ராஜபக்ஷ, தனது சகோதரரின் திருமணம் நடைபெற்றதாகவும் அதில் அரசியல்வாதிகள் பலர் கலந்து கொண்டமையை சிறந்ததாக காண்பதாகக் கூறியுள்ளார்.

அரசியலில் பரஸ்பரம் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் நாடாளுமன்றத்தில் ஒன்றாக இருக்கும் நபர்கள் என்ற வகையில் எவருடனும் தனிப்பட்ட ரீதியான பகைமை இருக்காது என நினைப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே தனது வழக்கு விசாரணை தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள யோஷித ராஜபக்ஷ, வழக்கு விசாரணைகள் நடந்து முடிய சில காலம் செல்லும் எனவும் தான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்கும் தேவை தமக்கு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (7-8)

# டிசெம்பர் 7 இற்குள் ஜனாதிபதித் தேர்தல்

## தேர்தல் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் டிசெம்பர் 7 ஆம் திகதி அல்லது அதற்கு முந்திய ஒரு சனிக்கிழமையில் நடத்தப்படும் வாய்ப்பு உள்ளதாக, தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலுக்கான அழைப்பை விடுக்காமல், தமது முழுப் பதவிக் காலமும் பதவியில் இருக்க முடிவு செய்தால், ஜனாதிபதித் தேர்தல் வரும் நவம்பர் 9 ஆம் திகதிக்கும் டிசெம்பர் 9 ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்பட வேண்டும்.

2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை ஒக்டோபர் 22 ஆம் திகதி இறுதி செய்வதற்கு தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

அன்றைய நாளில் தேர்தலுக்காக அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டால், குறைந்தபட்சம் அடுத்த நான்கு வாரங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

எனவே, டிசெம்பர் 7 ஆம் திகதி சனிக்கிழமை அல்லது அதற்கு முந்திய ஒரு சனிக்கிழமையில் தேர்தல் நடத்தப்படும் வாய்ப்பு உள்ளது என்றும், தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (7-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 180 | 240 |
| தக்காளி | 100 | 80 | 70 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 70 | 60 | 60 |
| கோவா | 80 | 60 | 60 | 60 | 80 |
| கரட் | 100 | 80 | 100 | 80 | 140 |
| பூசணி | 50 | 30 | 20 | 60 | 40 |
| புடோல் | 60 | 70 | 70 | 60 | 80 |
| வாழைக்காய் | 60 | 90 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 150 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 120 | 70 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 70 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 90 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 60 | 40 | 80 |
| கறிமிளகாய் | 150 | 150 | 70 | 70 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 400 | 600 |
| போஞ்சி | 60 | 80 | 60 | 60 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 70 | 30 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 25 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 130 | 120 | 80 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 80 | 80 | 60 | 120 |
| முள்ளங்கி | 30 | 60 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 15 | 40 |
| வல்லாரை | 15 | 80 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | – | 80 | 50 | 100 | 80 |

# 2018 ஆம் ஆண்டின் சிறந்த கப்பலாக சயுரல




(கொழும்பு)

2018 ஆம் ஆண்டில் சிறந்த கப்பலாக இலங்கை கடற்படை கப்பல் சயுரல பெயரிடப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் இலங்கை கடற்படை கப்பல்களின் சிறந்த கப்பல் தேர்ந்தெடுக்கப்படுகின்றதுடன் அங்கு கப்பல்களிடையில் நடத்தப்படுகின்ற விளையாட்டுப்போட்டிகள், கடற்படை அறிவு, கயிறு கையாளுதல் கப்பல்களுக்கு இடையே போர் பயிற்சிகள் மற்றும் கடலில் மிக கூடுதலாக பயணித்த கப்பல் எனக் காரணங்கள் அடிப்படையில் சிறந்த கப்பல் பெயரிடப்படும்.

அதன்படி கொடி அதிகாரி வெளியீட்டு கட்டளை மூலம் 2018 ஆம் ஆண்டில் சிறந்த கப்பலாக இலங்கை கடற்படை கப்பல் சயுரல பெயரிடப்பட்டது.

அது தொடர்பான ஆண்டு குறிப்பிட்டுள்ள ஒரு நட்சத்திரத்தைக் கொண்ட சின்னத்தை நேற்று கப்பலுக்குள் கொடி அதிகாரி வெளியீட்டு கட்டளை ரியர் அட்மிரல் ஆனந்த குருகேவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வுக்காக இலங்கை கடற்படை கப்பல் சயுரலவின் கட்டளை அதிகாரி கப்டன் (நீர்மூழ்கி) இசிர காஸிவெத்த உட்பட கப்பலின் அதிகாரிகள் மற்றும் வீரர்கள் கலந்துகொண்டனர். (7-8)

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ரஞ்சன் தரப்பு ஆட்சேபனை ஏற்பு



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, ரஞ்சன் ராமநாயக்கவின் சட்டத்தரணி முன்வைத்த ஆட்சேபனையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

ரஞ்சன் ராமநாயக்கவின் சார்பாக வாதாடிய ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மேற்படி ஆட்சேபனையை முன்வைத்தார்.

1995 இன் 14 ஆம் இலக்க சாட்சி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 (1) (D) பிரிவின்படி செயற்பட மனுதாரர் தரப்பு தவறிவிட்டதாக சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக் காட்டினார்.

விசாரணை ஆரம்பிக்கப் படுவதற்கு 45 நாட்கள் முன்னதாக அறிக்கை சமர்ப்பிக்க மனுதாரர் தரப்பு தவறி விட்டது.

இதனையடுத்து வழக்கை விசாரித்து வந்த 3 உறுப்பினர்களை கொண்ட உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் சிசி ரடி ஆப்ரூ, பிரசன்ன ஜெயவர்த்தன மற்றும் விஜித கே. மலல்கொட ஆகியோரைக் கொண்ட குழாம் மேலதிக விசாரணையை எதிர்வரும் மார்ச் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. அத்துடன் இந்த வழக்கின் சாட்சிகள் அன்றைய தினம் நீதிமன்றத்தில்சமுகமளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஒரு ஊடகவியலாளர் சந்திப்பில் நீதித்துறை மற்றும் சட்டத்தரணிகளின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை கூறியதாக வண. மாகஸ்கந்த சுதந்ததேரர் மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரியான ஆர்.சுனில் பெரேரா ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க அவரது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பான சாட்சிகளின் பட்டியலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 41 பேரின் பெயர்களை உள்ளடக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சதிகளை முறியடித்து சாதனை படைக்க வேண்டும்

## மாணவர்களுக்கு சிறிதரன் எம்.பி. அறிவுரை





(யாழ்ப்பாணம்)

இணைப்பாட விதான செயற்பாடுகளினூடாக ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின்வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எமது மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் தலைசிறந்து விளங்கியவர்கள். தற்போதும் தலைசிறந்து விளங்கக் கூடிய வகையில் அவர்களிடம் திறன்கள் இருக்கின்றன.

அவர்களின் திறனை மழுங்கடித்து எமது மாணவர்களையும் இளைஞர்களையும் திசை திருப்பும் முயற்சிகள் இந்த மண்ணிலே கச்சிதமாக அரங்கேறிக் கொண்டு இருக்கின்றன.

இவற்றை எல்லாம் முறியடித்து நாம் கல்வியிலும் விளையாட்டிலும் சாதனை படைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முன்பள்ளிக்கு நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஏழாலை வடக்கு திவ்வியா முன்பள்ளியின் கட்டடத் திருத்த வேலைகளுக்காக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் இரண்டரை இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

இந்நிதிக்கான காசோலையை பாராளுமன்ற உறுப்பினர்சார்பாக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் உடுவில் பிரதேச செயலகத்தில் வைத்து திவ்வியா முன்பள்ளியின் தலைவர் முகுந்தனிடம் வழங்கினார். இந்நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் ஜெயக்காந்தன், ஏழாலை வடக்கு கிராம உத்தியோகத்தர் அகிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-89)

# வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதிய கார்



(மூதூர்)

திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதி விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தில் இருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது.

மேலும் சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலக்கம் காரணமாகவே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# புதிய பணிப்பாளராக கடற்படை அதிகாரி போர்க்கொடி உயர்த்தும் சுங்க அதிகாரிகள்

(கொழும்பு)

சுங்கப்பணிப்பாளராக முன்னாள் கடற்படை அதிகாரியை நியமிக்க அரசாங்கம் எடுத்துள்ள முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றும் சுங்க அதிகாரிகள் தவிர, ஏனைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் அனைவரும் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக இருந்த, முன்னாள் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் பி.எம்.எஸ். சாள்ஸ்சுக்கு பதிலாக, ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி றியர் அட்மிரல் சமல் பெர்னாண்டோவை நியமிப்பதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சுங்கத் திணைக்கள அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

புதிய பணிப்பாளரின் கீழ் பணியாற்ற முடியாது என்று அறிவித்துள்ள அவர்கள், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

சிவில் அரச திணைக்களங்கள், நிறுவனங்களின் தலைவர்களாக படை அதிகாரிகளை நியமிப்பதற்கு தடைவிதிக்கும் வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே பிறப்பித்திருந்த உத்தரவையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நியமனத்தில், கடந்த 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல் தலையீடுகள் இருப்பதாகவும், இந்தப் பதவிக்கு இலங்கை நிர்வாக சேவை அல்லது சுங்க சேவையின் சிறப்பு பதவி நிலை அதிகாரியே நியமிக்கப்பட வேண்டும் என்றும் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால், கொழும்பு உள்ளிட்ட துறைமுகங்களின் பணிகளும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "ஐயந்தெளிதல் அரங்கு" நாளை

(கொழும்பு)

சமயச் சர்ச்சைகளுக்குத் தீர்வு தேடும் "ஐயந்தெளிதல் அரங்கு" நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி சென்.லோறன்ஸ் வீதி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வளவாளராக கனடா சைவ சித்தாந்த பீட இயக்குநர் டாக்டர் இ.லம்போதரன் கலந்து கொள்வார். (இ-5)

# போதைப்பொருளுடன் ஈரான் பெண் கைது

(கொழும்பு)

போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த பெண் ஈரான் நாட்டைச் சேர்ந்தவர் எனவும், கட்டாரிலிருந்து நேற்றுக்காலை இலங்கை வந்த போதே அவரது பயணப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 400 கிராம் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)







யாழ்.திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

# சு.கவின் தலைவர் ஜனாதிபதி தேசிய அரசே தற்போதும் நடைமுறையில் உள்ளது

## துமிந்த எம்.பி. விளக்கம்



(அநுராதபுரம்)

தற்போது நடைமுறையில் இருப்பது தேசிய அரசாங்கம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்பதனாலும் அவர் தற்போதைய அரசாங்கத்தை தலைமை தாங்குவதனாலும் தற்போது தேசிய அரசாங்கம் நடைமுறையில் இருப்பதாக தான் தனிப்பட்ட அடிப்படையில் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பெறுபேற்றுக்குப் பயந்தே தேர்தல் தள்ளிவைப்பு!

## அரசு மீது அநுருத்த விசனம்

(பத்தரமுல்ல)

மாகாண சபைத் தேர்தல் பெறுபேறுகளுக்கு அச்சம் கொண்டு அரசாங்கம் தேர்தலை தொடர்ந்து பிற்போட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லயில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே



அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த இதனைத் தெரிவித்தார். (இ-7)

# ஞானசாரரை மன்னித்து விடுவது நீதிக்கான தவறான முன்மாதிரி

## ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்வது நீதித்துறைக்கான தவறான ஒரு முன்மாதிரியாக அமைந்து விடும் என ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அச்சங்கம் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தல் ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளது.

குற்றவாளியாகவுள்ள தேரரை விடுதலை செய்வதனால், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் விசாரணை உட்பட ஏனைய முக்கிய விடயங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு குறிப்பிடத்தக்களவு அச்சுறுத்தல் விடுக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவது, குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாது விடுவதை நியாயப்படுத்தும் ஒரு நிலைமையை உருவாக்கும். அத்துடன், பாதிக்கப்பட்டவர்களும், சாட்சியாளர்களும் நீதியை அணுகுவதை நிராகரிக்கும் சூழ்நிலையை உருவாக்கும்.



சிறைக் கைதி ஒருவருக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் நீதித்துறையின் அதிகபட்ச நடவடிக்கைக்குட்பட்டது எனவும், ஜனாதிபதி மன்னிப்பு வழங்க முன்னர் சட்டமா அதிபரிடமும் நீதி அமைச்சரிடமும் அறிக்கையொன்றைக் கோர வேண்டும் எனவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும், இதுவரையில் எந்தவித அறிக்கையும் ஜனாதிபதியால் கோரப்படவில்லை.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக குற்றவாளியாக்கப்பட்டிருக்கும் ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதன் ஊடாக நீதிமன்றத்துக்குள் நீதிமன்றத்தை அச்சுறுத்தும் விதமாகச் செயற்பட முடியும் என்ற தவறான முன்மாதிரியை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கு காரணமாக இருக்கும்.

பல்வேறு தரப்பினரும் விசேடமாக மதத் தலைவர்களும் பௌத்த மத விவகார அமைச்சரினூடாக ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரியுள்ளதாக அறிய முடிவதாகவும், குற்றவாளியொருவருக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பில் பௌத்த மத விவகார அமைச்சர் ஒருவர் இவ்வாறு கோருவதற்கு தார்மீக அடிப்படைகள் எதுவும் கிடையாது எனவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஞானசார தேரர் பௌத்த மதத்துக்கு பாரிய சேவை ஆற்றிய ஒருவர் எனவும், இதனால், அவருக்கு ஜனாதிபதியின் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் சில தரப்புக்கள் தெரிவித்துள்ளன. ஆனால், ஞானசார தேரர் பௌத்த மதத்துக்கு எதிராகவும், நாட்டில் மத ரீதியிலும், வர்க்க ரீதியிலும் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக செயற்பட்டவர் எனவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்தல், சாட்சியாளர்களை அச்சுறுத்தல் போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு புறம்பாகவும் ஞானசார தேரர் மீது இன்னும் பல குற்றச்சாட்டுக்கள் காணப்படுவதாகவும் ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1631

Search for people, places and things

### குணால்

**பிறப்பு, இறப்பு மட்டுமே நம்மைத் தேடி வரும்... மற்றவைகளை நாம்தான் தேடிச் செல்லவேண்டும்**



### ரம்சன்

**யாருடனும் உன்னை ஒப்பிட்டுப் பார்க்காதே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு**




### இந்திரன்

**முடிவு தெரியாத நம் வாழ்க்கையில் நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் நம் வாழ்க்கையை மாற்றிக்கொண்டேயிருக்கும்**




### கவின்

**பெத்தவங்க பேச்சையும் தோத்தவங்க பேச்சையும் கேட்டாலே போதும் நாம் முன்னுக்கு வந்திடலாம்**



### பிரபு

**பயந்தவனுக்கு வலி நிறைந்த வாழ்க்கை துணிந்தவனுக்கோ வழி நிறைந்த வாழ்க்கை**



### வாணி

**இரண்டாம் பட்சமாகத்தான் நினைக்கப்பட்டிருக்கிறோம் என்று தெரிந்தும் விரிசல் விழ ஆரம்பித்து விடுகிறது உறவில்**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# குண்டோதரன்



குடந்தை நகரத்தில் குப்பன் என்றால் யாருக்கும் தெரியாது. குண்டோதர குப்பன் என்றால் சிறியோர் முதல் பெரியோர் வரை பிரசித்தம். குழந்தையாக இருக்கும் போதே அவன் பாட்டி செல்லமாக வயிறு புடைக்க ஊட்டிவிடுவாள். அப்போதே ஜுராசிக் பேபி ஆகிவிட்டான். வயது கூட கூட வளர்ச்சியும் அபரிதமாகக் கூடியது.

தொப்பையும் தொந்தியும் வயதுக்கு மீறி குண்டானதால் எல்லாரும் அவனை குண்டோதரா என அழைத்தனர். பள்ளியிலும் எந்த விளையாட்டிலும் பங்கேற்க முடியவில்லை. அவன்தந்தை தருமன் அவனை, "தினந்தோறும் ஒருமணி நேரம் வேகமாக நடக்கவேண்டும் உடற்பயிற்சி செய்ய வேண்டும் கொழுப்புச்சத்துள்ள பண்டங்களை சாப்பிடக் கூடாது. இளச்சவனுக்கு எள்ளு; கொழுத்தவனுக்குக் கொள்ளு என்றபடி நீ தினந்தோறும் கொள்ளு தண்ணீர்தான் குடிக்கவேண்டும்' என பலவிதமாக அவனுக்குப் புத்திமதி சொல்லிப்பார்த்தார்.

எல்லாவற்றிற்கும் தலையாட்டுவானே தவிர எதையும் சரிவர பின்பற்றவில்லை. இரண்டு தினங்கள் நடைபயிற்சி போவான். பின் ஒருவாரம் போகமாட்டான். எங்காவது கல்யாணம், விருந்து என்றால் வஞ்சனை இல்லாமல் ஒரு பிடி பிடிப்பான். கையில் காசு கிடைத்தால் ,நொறுக்குத் தீனி, ஐஸ்கிறீம். இதையெல்லாம் பார்த்து தருமன் அலுத்துப் போய்விட்டார். முடிவாக ஆழ்ந்த யோசனைச் செய்து குப்பனுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்தால்தான் பலன் கிட்டுமென எண்ணி செய்கையில் இறங்கினார்.

அதன்படி தன் மனைவியை கொஞ்சம் லட்டு செய்து தரும்படிக் கேட்டார். அதை ஒரு டப்பாவில் போட்டு, "ஏய் குண்டா! இங்க வா! என் நண்பனுக்கு 60வது பிறந்த நாள். எனக்கு உடல் நலம் சரியில்லை. ஆகவே, எனக்குப் பதிலாக நீ சென்று என் வாழ்த்துக்களைக் கூறி, இந்த இனிப்பு லட்டுக்களை அவரிடம் கொடுத்து வா!" என்றார்.

லட்டு என்றதும் குப்பனுக்கு நாக்கில் ஜலம் ஊறியது. அதனால் உடனே மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டான். தன் கிராமத்தைத் தாண்டிச் செல்லும் வழியில் ஒரு சுடுகாடு உள்ளது. இருப்பினும் குப்பன் மாலையில் புறப்படத் தயாரானான். அதற்குமுன் அவன் தந்தை தருமன் முன்னதாகவேச் சென்று, சுடுகாட்டின் அருகில் ஒரு பெரிய மரத்தின் பின் மறைந்து கொண்டார்.

குப்பன் சுடுகாட்டை நெருங்கும்போது இருள் சூழ ஆரம்பித்துவிட்டது. நடந்து வந்தக் களைப்பில் இரண்டு லட்டுகளைச் சாப்பிட்டால் என்ன என்று ஒரு ஓரமாக உட்கார்ந்து லட்டை ருசித்தான்.

அதைக் கண்டு மறைவிலிருந்த அவன் தந்தை தருமன்குரலைமாற்றிக்கொண்டு, "யாரடா அங்கே? என் எல்லையில் புகுந்தது. திருட்டு பயலே! என்ன தின்கிறாய்? எனக்கோ அகோர பசி. குண்டா உன்னை விழுங்கினால் தான் என் பசி தீரும். அசையாதே இதோ வருகிறேன்!" என்றார்.

இடமோ சுடுகாடு. இருள் சூழ்ந்துவிட்டது. ஏதோ பேய் தான் வருகிறது என பயந்து எடுத்தான் ஓட்டம் வீட்டை நோக்கி. வீட்டு வாசற்படியில் வந்து விழுந்தான்.

"ஐயோ! அம்மா! அப்பா! என்னைக் காப்பாற்றுங்கள். என்னை பேய் துரத்தி வருகிறது!" எனக் கதறினான்.

குப்பன் குரலைக் கேட்டு அவன் தாத்தாவும், அம்மாவும் வெளியே வந்து, "என்னடா குப்பா! என்னவாயிற்று எதைக் கண்டு பயந்தாய்? ஏன் இப்படி வியர்த்துக் கொட்டுகிறது?" என்று வினவி அவனை வீட்டிற்குள் அழைத்துச் சென்று, விபூதி பூசி திருஷ்டி கழித்தனர்.

அச்சமயம் ஒன்றுமே தெரியாததுபோல் தருமன் உள்ளே வந்தார். என்ன சமாசாரம் என்றார்.

"குப்பன் எதையோ பார்த்து பயந்து திரும்பி வந்து விட்டான்!"

"அதெல்லாம் ஒன்றுமிருக்காது. வெறும் பிரமை தான். அவனுக்கு ஏதாவது ஆகாரம் கொடு!" என்றார் தருமன்.

"இல்லை அப்பா! பிரமை அல்ல உண்மையிலேயே ஒரு பேய் சுடுகாட்டில் என்னை நோக்கி வருவதைக் கண்டேன். உன்னை விழுங்காமல் விடமாட்டேன். உன்னை விழுங்கினால்தான் என் பசி தீரும் என்றது. அதனிடமிருந்து தப்பித்தால் போதுமென ஓடிவந்தேன். இந்த உடம்போடு நடக்கமுடியாத எனக்கு எப்படி ஓடமுடிந்தது என்று யோசித்துப்பாருங்க... அப்போதுதான் உடற்பயிற்சி செய்வதன் அவசியம் புரிந்தது.

"நான் குண்டாய் இருந்ததால்தானே அப்பேய் என்னைக் கொல்ல வந்தது. இனி நீங்கள் சொல்வது போல் நடைபயிற்சி அல்ல ஓட்டப்பயிற்சிதான். சாப்பாடு மற்றும் எல்லா விடயத்திலும் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்வேன்!" என்று உறுதிப்படக் கூறினான்.

சாப்பிடும்போது தன் தட்டில் வைத்த லட்டை எடுத்து தன் தந்தையின் தட்டில் வைத்து விட்டான். ஆறு மாதத்திலேயே பருமன் குறைந்து ஆண் அழகனாக மாறிவிட்டான். அவனை பார்த்தவர்களெல்லாம், "இது யார் குண்டோதர குப்பனா நம்பமுடியவில்லையே!' என்றனர்.

வீட்டில் எல்லோரும் பேய்க்கு நன்றி தெரிவித்தனர். தருமன்தான் பேய் என்று யாருக்கும் தெரியாத ரகசியமாயிற்றே. தருமன் தன் தந்திரம் பலித்ததற்கு மகிழ்ச்சியுற்றார்.

## பொது அறிவுத் தகவல்கள்

- பழங்காலத்தில் சேரன் தீவு என்று அழைக்கப்பட்ட நாடு - இலங்கை
- உலகில் அதிக அருங்காட்சியங்கள் உள்ள நாடு- ஜேர்மனி
- திராட்சை மலரை தேசிய மலராக கொண்டுள்ள நாடு - சீனா
- கண் இல்லாத உயிரினம் மண்புழு.
- தோலினால் சுவாசிக்கும் உயிரினம் மண்புழு.
- மேல் தாடையை அசைக்கும் விலங்கு முதலை.
- மூக்கில் பல் இருக்கும் விலங்கு முதலை.
- வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் நண்டு.
- வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிர் ஈசல்.
- மைனா பறவையின் தாயகம் இந்தியா.

## உரோமம் நரைப்பது ஏன்?

நரைத்தமுடி அறிவின் அடையாளம்" என்பதெல்லாம் பொய் என்கிறது ஐரோப்பிய விஞ்ஞானிகள் குழு. கறுத்தமுடி நரைத்துப் போவது ஏன் என்பதற்கும் இப்போது விடை காணப்பட்டுள்ளது.

நம்முடைய உரோம செல்களில் இயற்கையாகவே சிறிதளவு ஐதரசன் பெராக்சைடு என்னும் வேதிப்பொருள் சுரக்கிறது. வயது அதிகரிக்கும்போது இவ்வாறு சுரக்கப்படும் ஐதரசன் பெராக்சைடின் அளவும் அதிகரிக்கிறது. உரோமத்திற்குள்ளேயே ஏற்படும் இந்த மாற்றங்கள் முடியை சாம்பல் நிறத்திற்கு மாற்றி அதன் பிறகு வெள்ளையாக்கிவிடுகிறது என்கிறார்கள் இந்த ஐரோப்பிய விஞ்ஞானிகள்.

உரோமத்திற்கு இயற்கையாகவே நிறமூட்டுவது மெலனின் என்னும் வேதிப்பொருளாகும். உரோமம், கண்கள், தோல் இவற்றின் நிறத்தை தீர்மானிப்பது இந்த மெலனின் தான். மெலனின் சுரப்பதை ஐதரசன் பெராக்சைடு தடைசெய்துவிடுவதுதான் பிரச்சினையின் மூலவேர்.

மனிதர்களின் உரோமக் கால்களின் மாதிரிகளை பகுப்பாய்வு செய்து இந்த முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. உரோமக்கால்களில் சுரக்கும் ஐதரசன் பெராக்சைடை தண்ணீராகவும் ஐதரசன் வாயுவாகவும் சிதைவடையச் செய்யும் பணியை MSR A and B என்னும் என்சைம்கள் செய்கின்றன. MSR A and B என்சைம்கள் சுரப்பது குறைவடையும்போது ஐதரசன் பெராக்சைடு சிதைவடைவதும் குறைந்துபோகிறது. ஐதரசன் பெராக்சைடு அதிகரிப்பதால் tyrosinase என்னும் என்சைம் உற்பத்தியாவதும் நின்று போய்விடுகிறது. மயிர்க்கால்களில் மெலனின் சுரப்பதற்கு இந்த tyrosinase எனப்படும் என்சைம்தான் காரணம்.

# மின்கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்கப் போவதில்லை

## அமைச்சர் ரவி உறுதி



(கொழும்பு)

எக்காரணம் கொண்டும் மின்சார சபையை தனியார் மயப்படுத்தவோ மின்கட்டணத்தை அதிகரிக்கவோ இடமளிக்கப் போவதில்லை என மின்சக்தி எரிசக்தி மற்றும் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஆறு மாத காலத்தினுள் மின்சார சபையை தலைசிறந்த நிறுவனமாக மாற்றுவதோடு ஏப்ரல் மாதத்தில் சகல பிரதேசங்களிலும் பாவனையாளர் பிரிவுகளை ஆரம்பிக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தலங்கம பாவனையாளர் சேவை அலுவலகத் திறப்பு விழாவின் போது கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

நட்டத்தை இலாபமாக மாற்றுவதற்காகவே மின்சார சபையை நவீனமயப்படுத்தி வருகிறோம். இந்த வருட மின்சார சபையின் நட்டம் 8000 கோடிகளாகும். இது மகாவலி திட்டமொன்றை உருவாக்குவதற்கு செலவாகும் தொகையாகும். அரசியல்வாதிகள் உரிய நேரத்தில் முடிவுகளை எடுக்காதது தான் இந்தப் பிரச்சினை பூதாகரமானதாக அமைந்தது.

நாம் மின்கட்டணத்தை அதிகரிக்க முடியாது. அதற்கு இடமளிக்க மாட்டேன். தனியார் மயப்படுத்தவும் மாட்டோம். மின்உற்பத்தி செலவை குறைத்தால் எமக்கு அதன் பயனை பாவனையாளர்களுக்கு வழங்க முடியும். பூச்சியம் முதல் 120 அலகுகள் வரையான பாவனையாளர்கள் மற்றும் மதஸ்தலங்கள், அரச நிறுவனங்கள் என்பவற்றுக்கான மின் விநியோகத்தின் மூலமே நட்டம் ஏற்படுகிறது.

65 இலட்சமாக இருக்கும் எமது பாவனையாளர் தொகை வருடாந்தம் 6 முதல் 7 வீதத்தினால் உயர்வடைகிறது. மின்சார சபைக்கு ஏகபோக உரிமை இருக்கிறது. மின்சார சபை தவிர பாவனையாளர்களுக்கு வேறு மாற்றுவழி கிடையாது. இந்த நிலையை மாற்றி செயற்றிறன் மிக்க நிறுவனமாக இதனை மாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மின்சக்தி எரிசக்தி அமைச்சின் கீழ் வரும் சகல நிறுவனங்களுக்கும் புதிய தலைவர்களும் பணிப்பாளர் சபையும் நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மலேசிய கப்பலிலிருந்து அதிகாரியை மீட்டு வந்த இலங்கைக் கடற்படை



(கொழும்பு)

இலங்கைக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த மலேசிய போர்க்கப்பல் ஒன்றில், நோய்வாய்ப்பட்டிருந்த கடற்படை அதிகாரி ஒருவர் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள கடல் மீட்பு ஒருங்கிணைப்புச் செயலகத்துக்கு, மலேசிய தூதரகத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து, இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகு ஒன்று விரைந்து சென்று, மலேசியப் போர்க்கப்பலிலிருந்து, நோய்வாய்ப்பட்டிருந்த அவசர சிகிச்சை தேவைப்பட்ட கடற்படை அதிகாரியை மீட்டு வந்தது. மலேசிய கடற்படை அதிகாரி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7-8)

# மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு; குண்டு தயாரிக்கும் ஆவணம் மீட்பு



(கண்டி)

கண்டி மற்றும் மாவனெல்லை ஆகிய பிரதான நகரங்களை அண்மித்த பகுதிகளில் ஒரே இரவில் நான்கு இடங்களில் புத்தர் சிலைகள் அடித்து சேதமாக்கப்பட்ட சம்பவங்களுடன் ஆரம்பமான புத்தர் சிலை உடைப்பு விவகார விசாரணைகளில், கைது செய்யப்பட்டுள்ள 15 சந்தேகநபர்களில் 12 ஆம் சந்தேக நபரிடம் இருந்து குண்டு தயாரிக்கும் படிமுறைகள் அடங்கிய முக்கிய ஆவணம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

புத்தளம், வனாத்துவில்லு - லக்டோ ஹவுஸ் தென்னந்தோப்பில் வைத்து கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களைக் கொன்டு எவ்வாறு இந்த குண்டுகளை தயாரிக்கலாம் எனும் பூரண செயன்முறை அந்த ஆவணத்தில் இருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.) நேற்று முன்தினம் மாவனெல்லை நீதவான் உப்புல் ராஜகருணாவுக்கு அறிவித்தது.

குறித்த வழக்கு விசாரணைக்கு வந்த போதே குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவு இலக்கம் 2 இன் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜனக மாரசிங்க, வன்னாத்துவில்லிஉவில் கைப்பற்றப்பட்ட வெடி பொருட்கள், இரசாயனங்களை நீதிமன்றில் ஒப்படைத்து இந்த விடயத்தை தெரிவித்தார்.

அத்துடன் இதன்போது நீதவான் முன்னிலையில் விசாரணைகளின் நிலைமையை அறிவித்த, கேகாலை மாவட்ட தீர்க்கப்படாத குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அபேரத்ன, இந்த சிலை உடைப்பு விவகாரம் இன , மத வாதத்தை தூண்டி இலங்கையில் மற்றொரு யுத்தத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளின் ஆரம்பம் என்பது விசாரணைகளில் தெளிவாகத் தெரிவித்தார். (7-8)

# அமெரிக்கா விலகியமையை அரசு சாதகமாக்கிக் கொள்ள வேண்டும்


## பூகோள அமைப்பின் பிரதிநிதி சுஷாந்தி தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்குத் தொடர்ந்து அரசாங்கம் இணையனுசரணை வழங்குவதால் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படாது. பிரேரணையை கொண்டு வந்த அமெரிக்கா இன்று மனித உரிமை பேரவையில் இருந்து விலகியுள்ளமையினை நாம் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இலங்கைக்கான தேசப்பற்று பூகோள அமைப்பின் பிரதிநிதி சுஷாந்தி அப்புகொட தெரிவித்தார்.

இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மனித உரிமை பேரவையில் இம்முறை இடம்பெறவுள்ள கூட்டத்தொடரில் இறுதியான தீர்மானம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினை எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்கு முன்வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# மகிந்த தேசப்பிரிய பதவி விலகக்கூடாது

## காமினி லொக்குகே வேண்டுகோள்



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரைப் பதவி விலக வேண்டாம் என மகிந்த ஆதரவு அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே கருத்துத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களின் நிலைப்பாட்டை தெரிவிக்க தேர்தல் அவசியமானது. இதனாலேயே நாம் மாகாணசபை, நாடாளுமன்றம், ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு கோருகிறோம்.

நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தேர்தலை நடத்தவில்லை என்றால் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். அதனால் என்ன பிரயோசனம் இருக்கிறது.

அவர் பதவி விலகுவதால் எதுவும் மாறாது. ஜனாதிபதி வர்த்தமானியின் மூலம் நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாள் குறித்தபோது, அது அரசியலமைப்பிற்கு முரணானது எனக் கூறினார்கள்.

இதற்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் நீதிமன்றத்தை நாடின. ஜனாதிபதி செய்தது தவறு என்று கூறி, தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவரும் நீதிமன்றத்தை நாடினார்.

அப்படியாயின் தேர்தலைப் பிற்போடுவது அரசியலமைப்பிற்கு முரணானது எனக் கூறி தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் நீதிமன்றம் செல்லலாம் தானே. ஏன் செல்லவில்லை.

இதனால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரை பதவி விலகவேண்டாம் எனக் கோருகிறோம். உங்கள் பிரதிநிதி நீதிமன்றம் சென்றதைப் போல், நீங்களும் நீதிமன்றம் சென்று தேர்தலை நடத்தக் கோருங்கள். பிரச்சினையைத் தீர்த்து திகதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நாம் நீதிமன்றம் சென்றால் தீர்ப்பு கிடைப்பதில்லை" என காமினி லொக்குகே மேலும் தெரிவித்துள்ளார். (7-8)




உங்கள் மீதும், இறைவன் மீதும் திட நம்பிக்கை கொள்வது என்பது இரண்டும் ஒன்றே

– ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆலயங்கள் இளைஞர்களை வழிப்படுத்த வேண்டும்

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது நம் முதுமொழி. ஆலயம் என்பது ஆன்மாவை லயப்படுத்துவதென்று பொருள்படும்.

இதனாலேயே நம்மவர்கள் ஊர் தோறும் ஆலயம் அமைத்ததனூடாக சமூக ஒற்றுமை, சமூகப்பணி, அறப்பணி, அன்னதானப் பணி என அனைத்தும் முன்னெடுக்கப்பட்டன.

ஊர் கூடித் தேர் இழுப்பதும் ஊரார் சேர்ந்து சமையல் செய்து அன்னதானம் வழங்குவதும் அந்தந்த ஊர் மக்களின் ஒற்றுமையை வளர்ப்பதாக இருந்தன.

தவிர, மார்கழி மாதத்து திருவெம்பாவை என்றதும் பெரியவர்களும் இளைஞர்களும் மாணவர்களும் வைகறைப்பொழுதில் எழுந்து நீராடி ஒன்றுகூடி வீதிதோறும் திருப்பள்ளி எழுச்சி பாடி அந்தப் பனி விழும் நேரத்திலும் தெய்வீகத்தை உணர்த்துவர்.

இவ்வாறாக சிறுவர் முதல் பெரியவர்கள் வரை ஆன்மிக நாட்டத்துடன்; இறை நம்பிக்கையுடன் தங்கள் பணியைத் தொடர்ந்தனர்.

இளைஞர்கள் பெரியவர்களை மதித்தனர். மாணவர்கள் கல்வியில் நாட்டம் கொண்டனர்.

இதனால் ஒரு ஊரில் என்ன சம்பவம் நடந்தாலும் அந்த ஊர் மக்கள் திரண்டு விடுவர். இந்த ஒற்றுமை மக்களின் வாழ்வை மகிழ்வாக்கியது.

இல்லை என்றிருப்போருக்கும் கொடுத்து உண்டு மகிழ்ந்த அந்த மகிழ்வு இன்று தொலைந்து போய்விட்டது.

அடுத்த வீட்டில் இருப்பது யார் என்று தெரியாத அளவில் எங்கள் வாழ்வு குறுகியதாயிற்று.

இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதன் பின்னணியில் ஆலயங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் காரணம் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆலடி வைரவருக்கும் அரசடி பிள்ளையாருக்கும் பெருங்கோயில்கட்டி அவர்களை பூட்டி வைத்துவிட்டோம்.

ஊர் மக்கள் பூசை செய்த வைரவர் இப்போது சிவாச்சாரியாரின் வருகைக்காகக் காத்திருக்கின்றார்.

இயந்திர வாழ்வில் அதிகரித்த கோவில் கலாசாரத்தில் எவருக்கும் நேரம் இல்லை. அந்தரமும் அவசரமும் பூசை வழிபாட்டின் மீது காட்டப்பட்ட எல்லாமும் செப்படி வித்தை என்பதாக மாறிவிட்டது.

இரவுப்பொழுது ஆலடிப்பிள்ளையாருக்கு நடைபெறும் பூசை வழிபாட்டை ஊர் மக்கள் கூடி நின்று தரிசிப்பர்.

பூசை நிறைவடைய பிரசாதம் பெறுவதிலும் பெற்ற பிரசாதத்தை உண்பதிலும் அதில் ஒரு சிறு பகுதியை வீட்டுக்கு எடுத்துச் செல்வதிலும் எத்தனை மகிழ்வு.

இதுமட்டுமல்ல, ஆலயத்தின் முன்றலில் ஆலடி மரத்தின் அடிவாரத்தில் குந்தியிருந்து கதைத்து மன ஆரோக்கியத்தை கட்டி வளர்த்த அந்தப் பண்பாடு இன்று எங்கே?

இரவுப் பொழுதில் கோயில் பூசை இல்லை. அதனால் ஊர் கூடுகின்ற வழமை இல்லை.

ஆலயத்தில் கூடி நின்ற இளைஞர்கள் இப்போது திசைமாறி போத்தல்களுடன், கூரிய வாள்களுடன் ஒன்றுகூடும் நிலைமை வந்துவிட்டது.

இந்த மோசமான சூழ்நிலையை மாற்ற மீண்டும் ஆலயங்களில் இரவு 7 மணி முதல் இரவு 8 மணி வரை நித்திய பூசை நடக்கட்டும்.

நம் இளைஞர்கள் கோயில் வாசலில் கூடட்டும். சிவாச்சாரியார்கள் இளைஞர்களை வழிப்படுத்தும் கருத்துக்களை ஐந்து நிமிடமேனும் கூறட்டும்.

இவ்வாறு செய்யப்படுமாயின் நிச்சயம் எங்கள் மக்கள் சமூகத்தில் மாற்றம் ஏற்படட்டும். இது சத்தியம்.

## பாடசாலை நேரத்தில் தனியார் பிரத்தியேக வகுப்புக்களை தடை செய்ய அரசு நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை நேரத்தில் தனியார் பிரத்தியேக வகுப்புகளுக்கு (ரியூசன்) மாணவர்கள் செல்வதைத் தடுப்பதற்கு புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

பாடசாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்புக்களில் மாணவர்கள் கலந்து கொள்வதைத் தடுக்கவும் அத்தகைய வகுப்புகள் நடத்தப்படுவதை தடுக்கவும் அமைச்சரவையில் யோசனை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பாடசாலை நேரத்தில் தனியார்வகுப்புக்களில்க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள் கலந்துகொள்வதால் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் மாணவர்கள் வருகை வீழ்ச்சியடைந்திருப்பதாகக் கிடைக்கப்பெற்ற பெருவாரியான முறைப்பாடுகளை அடுத்தே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆனால், இரண்டாம் தடவை பரீட்சைக்குத் தோற்றுவதற்காக மீட்டல் வகுப்புகளில் பங்கேற்கின்ற மாணவர்களுக்கு இந்த ஒழுங்கு விதிகள் பிரயோகிக்கப்படமாட்டாது.

போயாதினங்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மதபோதனை வகுப்புகளுக்கு மாணவர்கள் செல்வதை ஊக்குவிக்கும் நோக்கில் அந்தநாட்களிலும் தனியார் பிரத்தியேக வகுப்புக்களை தடைசெய்வதற்கான திட்டத்துக்கு மேலதிகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ஆசிரியர்களையும் அதிபர்களையும் நியமிப்பதற்கும் பெருமளவு நிதி செலவிடப்படுகின்ற போதிலும், பாடசாலைகளில் மாணவர்கள் வருகையில் காணப்படுகின்ற வீழ்ச்சி கல்வி முறையைப் பெரிதும் பாதிக்கின்றது என்று கூறிய அமைச்சர் காரியவசம், பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் பாடவிதானங்களை நிறைவு செய்யமுடிவதில்லை.

அதன் காரணத்தாலேயே மாணவர்கள் பிரத்தியேக வகுப்புக்களை நாட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்ற கல்வித்துறை சார் தொழிற்சங்கங்களின் குற்றச்சாட்டை அமைச்சர் நிராகரித்தார். (இ-7)

## இந்தியா செல்ல முற்பட்டவர் மண்டைதீவில் கைது

சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இந்தியா செல்வதற்கு முயற்சித்த ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். வடக்கு கடற்படை அதிகாரிகளால் மண்டைதீவு பிரதேசத்தில் நடத்தப்பட்ட கடல் ரோந்து நடவடிக்கையில் சந்தேகத்திற்குரிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம நடத்தப்பட்ட விசாரணையில் அவர் சட்டவிரோதமாக இந்தியா செல்ல தயாராக இருந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பெல்மதுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாககடற்படையினர தெரிவித்துள்ளனர். (ம-3)

## காணிப்பிரச்சினைகளை ஆராய யாழில் இன்று நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச காணி தினத்தை முன்னிட்டு அரச காணி தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் நடமாடும் சேவை இனறு காலை 9 மணி முதல யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள 17ஆம் இலக்க மாநாட்டு மண்டபத்தில்நடைபெறும்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், மாகாண காணி திணைக்களம், யாழ் மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நடமாடும் சேவையில் அரச காணி தொடர்பான பிணக்குகள் உள்ளவர்கள் கலந்து பயன் பெற முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில உடுவில் ஒரு பகுதி, சங்குவேலி, மானிப்பாய் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில மலையாபருத்திக்குளம் பிரதேசத்திலும், மின் தடைப்படும்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(சாவகச்சேரி)

யா/கொடிகாமம் திருநாவுககரசு ஆரம்ப பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சறோசாதேவியும் சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பிரித்தானிய நாட்டு பழைய மாணவர் சங்க விளையாட்டுச் செயலாளர ம.ஸ்ரீதாசனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-30)

**********************

யா/போக்கட்டி அ.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் மற்றும் பிரித்தானிய நாட்டின் தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றிய விளையாட்டுச் செயலாளர் ம.ஸ்ரீதாஸன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-30)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

உலகெலாம் ஆண்ட சகரன் எங்கே? திலீபன் எங்கே? அசோகன் எங்கே? பரந்த அரண்மனை புதுக்கி பல மனைவியரை மணந்த சரபோஜி எங்கே? அவர்கள் வாழ்வு எங்கே? எல்லாம் பழங்கனவாய் மறைந்து விட்டது. மெய்ப்பொருளை நாடிய வள்ளுவரும் நால்வரும் பன்னிருவரும் அருணகிரி நாதரும் தாயுமானவரும் இன்று அமரத்துவம் பெற்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் உலவி வருகின்றனர். உலகுக்கு இன்றும் நின்று அவர்களுடைய ஞானவாக்குகள் வழிகாட்டுகின்றன.

கடவுதல் என்றால் செலுத்துதல் என்று பொருள். உலகங்களையும் உயிர்களாகிய நம்மையும் செலுத்துகின்றபடியால் இறைவனுக்கு கடவுள் என்று பெயர் ஏற்பட்டது. நம்மையெல்லாம் செலுத்துகின்றவர் கடவுள். ஒரு வண்டியைச் செலுத்துவது போல நம்முடைய கடவுள் உயிராக இருந்து செலுத்துகின்றார்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### விசுவாசம்

பயம பேராசை எலலாம விசுவாசததிறகுத தடைகளாகின்றன. உலகம் சார்ந்த மற்றும் ஆன்மீக வாழ்க்கை வளாசசி நிலைகளில விசுவாசம தேவை.எநத ஒரு நிறுவனத்தையோ குழுவையோ அல்லது சமூகத்தையோ ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் விசுவாசம் இன்றியமையாதது.

விசுவாசம் என்பது எடுத்துக் கொண்ட பொறுப்பின் தொடர்ச்சியில் நம்பிக்கை கொள்வதும் அப்பொறுப்பை மதிததுச செயலபடுவதும ஆகும. இது நமமை விருபபு வெறுபபுகளை கடநத நிலைககு அழைததுச செலகிறது பொறுபபுணாவு அதறகாக முழு அாபபணம மனோதிடம இவை விசுவா சத்தின் அங்கங்கள் விசுவாசமுள்ள மனம் “ஆம்” எனும் மனம் விடையைப் பெறுவதே கேளவிகள கேடபதன நோககம. எலலா விடைகளின நோக்கமும் “ஆம்” என்பதைக் பெறுவது தான்.

“ஆம்” என்பது ஞானத்தை ஒப்புக் கொள்ளுதல். “ஆம்” எனும் மனம் அமைதியான புனிதமான இன்பமயமான மனம் “இல்லை” எனும் மனம் கிளர்ச்சி யான சந்தேகம் கொள்ளும் துன்பமயமான மனம்

“ஆம்” எனும் மன நிலையில் விசுவாசம் தொடங்குகிறது. “இல்லை” எனும் மனநிலையில் அது அழிய ஆரம்பிக்கிறது.

*(முற்றும்)*



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவனுக்கு இந்தப் பொருட்களைக் கொண்டு ஒருபோதும் வழிபடாதீர்கள்

சில பொருட்கள் சிவபெருமானுக்கு மிகவும் பிடிக்கும், அவற்றை வைத்து வணங்கும்போது சிவபெருமான் குளிர்ந்து வேண்டுவதை அருளுவார். அதேபோல சிவனுக்கு பிடிக்காத சில பொருட்களை வைத்து வழிபட்டால் நமது அழிவு நிச்சயம்.

அந்த வகையில் எந்தெந்த பொருட்களை வைத்து சிவபெருமானை வணஙகினால ஆபதது எனபதை இங்கே பார்க்கலாம்.

சிவ்னுக்கு பிடிக்காதவை

கேதகி மலரை ஒருபோதும் சிவனுக்கு வைத்து வணங்கக்கூடாது. எக்காரணத்தை கொண்டும் சிவனை கேதகை மலரை கொண்டு வழிபடாதீர்கள்.

சிவபெருமானுக்கு துளசியை வைத்து வழிபடாதீர்கள்.பிறகு ஈசனின் கடுங்கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

சிவபெருமானுக்கு தேங்காயை வைத்து வழிபடலாம.ஆனால தேஙகாய நீரை படைககககூடாது.நாம அருந்தக்கூடிய பொருளான தேங்காய் தண்ணீரை சிவனுக்கு படைப்பது பாவத்தின் உச்சமாகும். (தொடரும்)

## வள்ளுவன் விளையாட்டுக்கழக கரப்பந்தாட்டம்

# உடுவில் அம்பாளை வீழ்த்தி சம்பியனாகியது துர்க்கா










மைலன்ட் குறுப் ஓவ் கம்பனியின் அனுசரணையில் வண்ணார்பண்ணை வள்ளுவன் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை வள்ளுவன் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் கோண்டாவில் துர்க்கா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் கோண்டாவில் துர்க்கா அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டதை வென்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக கோண்டாவில் துர்க்கா விளையாட்டுக் கழக வீரர் சிவரூபன் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் மூன்றாமிடத்திற்காக போட்டியில் வெற்றி பெற்று மூன்றாமிடத்திற்கான கிண்ணத்தை சாவற்கட்டு மகாத்மா அணி பெற்றுக் கொண்டது. (க)

## வலைப்பந்தாட்ட அணிகளுக்கான அனுமதி

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம் யாழ். மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் தமிழ்மொழி மூல வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான செயன்முறைப் பரீட்சையினை நாளை மற்றும் நாளை மறுதினம் நடத்தவுள்ளது.

இப் பரீட்சையினை திறம்பட நடத்துவதற்கு தங்கள் பாடசாலையின் வலைப்பந்தாட்ட அணிகளினைத் தந்துதவி யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட வளர்ச்சிக்கு உதவுமாறு யாழ். மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (க)

## நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு பிற்போடல்

எதிர்வரும் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ் மாவட்ட போட்டிகளான கராத்தே மற்றும் பளுதூக்கல் போட்டிகள் நடைபெற இருப்பதால் நல்லூர் பிரதேச செயலக போட்டிகளான கரம், மேசைப்பந்தாட்டம், சதுரங்க போட்டிகள் நடைபெறமாட்டாது.

இம் மூன்று போட்டிகளும் எதிர்வரும் 09.02.2019 சனிக்கிழமை நடைபெறும் என நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (க)



முல்லைத்தீவு - உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயத்தில் 2019ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து கொண்டார்.

## உதயமாகிறது தென்மராட்சி கடினப்பந்து கிரிகெட் அக்கடமி

தென்மராட்சி டிறிபேர்க் ஸ்டார் விளையாட்டு கழக கடினபந்து துடுப்பாட்ட அணியினரால், 15 வயதுக்குட்பட்ட கிரிகெட் ஆர்வமுள்ள சிறார்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்க "கிரிகெற் அக்கடமி" ஒன்றை உருவாக்குகிறார்கள் .இது தொடர்பான கலந்துரை யாடல் இன்று வெள்ளிக் கிழமை மதியம் 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது ஆர்வமான மாணவர்கள் பெற்றோருடன் வருகை தரலாம் என டிறிபேர் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## வட மாகாண ரீதியிலான மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இளவாலை கலைமகள் படிப்பகம் சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டை முன்னிட்டு வலி.வடக்கு சவாரி சங்கத்தின் அனுசரணையுடன் கலைமகள் படிப்பகம் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வலி.வடக்கு பிரதேச சபையின் புதிய சவாரித் திடலில் பிற்பகல் ஒரு மணிமுதல் இடம்பெறவுள்ளது.

இதில் முதலிடம் பெறும் 4 பிரிவினருக்கும் துவிச்சக்கர வண்டியும் மேலும் ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் வட மாகாணத்தில் உள்ள சகல மாட்டு வண்டிச்சவாரியாளர்களும் பங்கு கொள்ள முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளன்ர். (க)

## 200 ஆவது போட்டியில் விழுந்த மரண அடி



நியூசிலாந்து அணிக்கு எதிரான மோசமான தோல்வி குறித்து இந்திய அணித்தலைவர் ரோஹித் ஷர்மா வருத்தம் தெரிவித்துள்ளார்.

இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 4 ஆவது ஒருநாள் போட்டி ஹாமில்டனில் நடைபெற்றது.

இதில் இந்திய அணி 92 ஓட்டங்களில் சுருண்டு மோசமான தோல்வியை தழுவியது. கோஹ்லிக்கு ஓய்வு அளிக்கப்பட்டதால் ரோஹித் ஷர்மா இந்தப் போட்டிக்கு தலைவராக செயற்பட்டார்.

இது அவருக்கு 200ஆவது ஒரு நாள் போட்டியாகும்.

இந்நிலையில் தோல்வி குறித்து ரோஹித் ஷர்மா கூறுகையில், 'நீண்ட காலத்திற்கு பிறகு இது ஒரு மோசமான ஆட்டம்.

யாரும் இதை எதிர்ப்பார்க்கவில்லை. நியூசிலாந்து அணியின் பந்துவீச்சாளர்களை பாராட்டியே ஆக வேண்டும்.இது அவர்களுக்கு ஒரு நல்ல முயற்சி. இது எங்களுக்கு ஒரு படிப்பினை.

இதற்காக யாரையும் குறை கூற முடியாது. ஆனால் செய்த தவறுகளை வீரர்கள் திருத்திக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (க)

## இலங்கையின்...

ஒன்றியம், தமிழ் மக்களை புதைகுழியினுள் தள்ளிய ஒரு நாள் என்பதனால் நாம் இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாள் எனத் தெரிவிக்கிறோம்.

மேலும் மக்களின் குரலை சர்வதேசத்திடம் வெளிப்படுத்தி நீதி கேட்கும் முகமாக தமிழர் தாயகத்தில் இடம்பெறும் போராட்டங்களிற்கு வலுச்சேர்க்குமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கையின் சுதந்திரதினம் தொடர்பான யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கை காலணித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்று 71 ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நிலையிலும், உள்நாட்டு யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் கடந்த நிலையிலும் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் இதுவரை கண்டறியப்படவில்லை. தமிழர் நிலங்களில் இருந்து இராணுவம் வெளியேறவில்லை. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் தமிழரது பூர்வீக நிலங்கள் சூறையாடப்படுகின்றது. தொல்பொருள் திணைக்கள ஆய்வு என்ற வகையில் வணக்கஸ்தலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றது. புலிகள் மீளுருவாக்கம் என்ற போர்வையில் அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்படுகின்ற அவலம் தொடர்கிறது. புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கைது செய்யப்படும் காணாமல் ஆக்கப்படும் சூழ்நிலையில் சுதந்திரமான சுவாசக் காற்றை சுவாசிக்க தமிழ் மக்களுக்கு இன்றுவரை தடைகளே காணப்பட்டுவருகின்ற நிலையில் யாருக்கு சுதந்திரம் கிடைத்தது என்கிற கேள்வியே எல்லாவற்றையும் முந்திக்கொண்டு கேள்விக் குறியாய்எம்முன்னே எழுந்துநிற்கிறது.

பயங்கரவாத தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு நாற்பது வருடங்கள் கடந்துபோன இன்றைய நிலையிலும் அந்த சட்டம் யுத்தம் முடிந்தும் நீக்கப்படாமல் அமுலில் இருப்பதானது காலங்காலமாக தமிழரை அடக்கி ஒடுக்கி அடிமையாக்கப்பட்ட இனமாக வைத்திருக்க விரும்புவதன் வெளிப்பாடே ஆகும். இலங்கை சுதந்திரம் அடைந்த நாள்தொட்டு இலங்கையில் நடந்த கலவரங்கள் தமிழர்களை இனவழிப்பு செய்யும் கலவரங்களாகவே நடந்துள்ளன.

இந்த இனவழிப்பின் உச்சமே முள்ளிவாய்க்கால் இனவழிப்பு யுத்தம் இலங்கையின் சிறுபான்மை இனங்களில் முதன்மையாக இருந்த நாம் இன்று மூன்றாம் நிலையை நோக்கி பின்தள்ளப்படுமளவுக்கு எமது உறவுகள் அழிக்கப்பட்டு உள்ளார்கள்.

இலங்கையில் ஆட்சிப்பீடம் ஏறுபவர்கள் யாராக இருந்தாலும் எவ்வாறான சட்டதிருத்தங்கள் நடந்தாலும் அது ஒற்றையாட்சி கட்டமைப்பினையும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தையும் பேணிப் பாதுகாக்கும் வகையிலேதான் அமையும் என்பதனை வரலாறு தெளிவாக எமக்கு கற்றுத்தந்துள்ளது. ஆதலால் வரலாற்றில் இருந்து நாம் பாடங்கற்றுக்கொள்ள வேண்டும். ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் ரீதி யாக வென்றெடுக்கப்பட வேண்டிய விடயங்களைக் கூட தூரநோக்கின்றி செயற்பட்ட தமிழ் அரசியல் தலைமைகளால் பெற்றுக்கொள்ள முடியாமல்போய்விட்டமை தமிழ்இனத்தின் துர்ப்பாக்கிய நிலையே ஆகும்.

இனப்பிரச்சினையில் இலங்கையின் மெத்தனப் போக்கினை சர்வதேசமும் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாலும், முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது இனப்படுகொலை தான் என்பதை அறிந்தும் அதற்கான சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையினை உருவாக்காமல் கால அவகாசம் வழங்கிக் கொண்டிருப்பதாலும் சர்வதேசத்தின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை வீண் போய் விடுமோ என்று எம்மை கவலை கொள்ள வைக்கிறது.

இன நல்லிணக்கம் என்பதனை வெற்று வார்த்தைகளால் உருவாக்கிட முடியாது. இனங்களிற்கு இடையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் முள்ளிவாய்க்காலில் நடந்தது இனப்படுகொலை என்பதனை ஏற்றுக்கொண்டு அதற்கான நீதியை வழங்குவதன் மூலமாகவே இன நல்லிணக்கம் நோக்கி நகர முடியும்.

எனவே தான் ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் அடக்குமுறைக்குள் இருக்கும் நிலையில் இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ் மக்களிற்கு சுதந்திரம் கிடைத்தநாளாக ஏற்றுக்கொள்ள முடியாது மாறாக இது பிரித்தானியா காலணித்துவவாதிகளிடம் இருந்து சிங்கள தலைவர்களின் கைகளிற்கு இலங்கையின் அரசியல் அதிகாரம் கைமாற்றப்பட்ட நாளே இலங்கையின் சுதந்திரதினம் என்பதால் தமிழ் மக்களை மேலும் புதைகுழியினுள் தள்ளிய ஒரு நாள் என்பதனால் நாம் இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாள் என தெரிவிக்கின்றோம்.

அன்றைய தினம் மக்களின் குரலை சர்வதேசத்திடம் வெளிப்படுத்தி நீதி கேட்கும் முகமாக தமிழர் தாயகத்தில் இடம்பெறும் போராட்டங்களிற்கு வலுச்சேர்க்குமாறு சிவில் சமூக அமைப்புகளையும், தமிழ் உணர்வாளர்களையும், இளைஞர்களையும் உரிமையோடு வேண்டி நிற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## சர்வதேச நீதிமன்றுக்கு...

யின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஏனைய கட்சிகளுடனும் புலம்பெயர் அமைப்புக்களையும் ஒன்றாகக் கூட்டி இது சம்பந்தமாக காத்திரமான முடிவுகளை எடுக்க வேண்டியது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நியாயத்தைப் பெற்றுக் கொள்ள உதவியாக இருக்குமென்றும் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையத்தின் செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. அந்தச் செயற்பாடுகள் மார்ச் மாதம் வரை நடைபெறவிருக்கின்றன. இதில் இலங்கை சம்பந்தமான பிரச்சினைகளும் கையாளப்படவிருக்கின்றது. ஆயினும்இதில்முக்கியமாக இலங்கைக்கு நான்கு வருடகால அவகாசம்கொடுக்கப்பட்டிருக்கின்றதை நாங்கள் பார்க்கின்றோம்.

இந்த நான்கு வருட கால அவகாசத்தில் காணாமற்போனோர், யுத்தக் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்ற பல விடயங்கள் சம்பந்தமாக ஒரு சட்டபூர்வமாக அவை விசாரிக்கப்பட வேண்டும். சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைக் குழு மூலமாக விசாரணை நடைபெற வேண்டுமென பல விடயங்கள் முன்வைக்கப்பட்டாலும் இலங்கை அரசாங்கம் அதனை முற்று முழுதாக மறுதலித்து வருகின்றது.

அதனால் எவ்வாறான விசாரணைக் கமிசன்களும் இதுவரையில் நியமிக்கப்படவில்லை. அது மாத்திரமல்லாமல் ஏற்கனவே இலங்கை அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல விடயங்கள் இன்னமும் செய்யப்படவில்லை. அதிலும் காணாமற்போனோர் அலுவலகமொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதிலும் கூட எந்தவிதமான அதிகாரமுமற்ற அலுவலகமாகத் தான் அதுவும் இருக்கின்றது. ஆகையினால் காணாமற்போனோர்களின் உறவினர்கள் கூட அந்த அலுவலகத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டதாகவும் இல்லை.

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை விடயம் தொடர்பாக இந்த கூட்டத்தொடரில் மீள ஆய்வுக்குட்படுத்தப்பட இருக்கின்றது. இதில் தமிழ் மக்கள் சார்பாக நாங்கள் எவ்விதமான கோரிக்கையை முன்வைக்கப் போகின்றோம் என்பது முக்கியமான விடயமாக இருக்கின்றது.

இதில் இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகள் இந்த விடயத்தை முன்னெடுக்க உள்ளதாக நாங்கள் அறிகின்றோம். அது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அதன் தலைவர் அவர்களுடன் பேசியதாகவும் நாங்கள் அறிகின்றோம். ஐரோப்பிய யூனியனைப் பொறுத்தவரையில் மேலும் கால அவகாசம் கொடுக்க வேண்டுமென்ற தொனியில் பேசி வருவதையும் நாங்கள் காண்கின்றோம்.

ஆகவே இவ்வாறான செயற்பாடுகளுக்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஏனைய தமிழ்க் கட்சிகள், புலம் பெயர்அமைப்புக்கள் ஒன்றுகூடி ஜெனிவா அமர்வில் என்னவிதமான முடிவுகளை நாங்கள் எடுக்க போகின்றோம் என்ன விதமான கோரிக்கைகளை முன்வைக்கப் போகின்றோம் என்ற முடிவுகளை ஒருவிதமாக எடுப்பதே மிக மிக தேவையான ஒன்றாகவும் அது தான் ஆரோக்கியமான ஒன்றாக இருக்குமென்றும் நாங்கள் கருதுகின்றோம்.

இதனைவிடுத்து தொடர்ந்தும் நாங்கள் கால அவகாசம் வழங்கப் போகின்றோமா இல்லையென்றால் இலங்கை அரசாங்கம் எதனையும் செய்ய மறுதலித்து விட்டதென்ற அடிப்படையில் அடுத்த கட்டமாக சர்வதேச தீர்ப்பாயத்திற்கு அனுப்புவதா அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்புவதா என்ற பல கேள்விகள் இருக்கின்றது.

ஆகவே அது தொடர்பில் ஒரே விதமான முடிவுகளை நாங்கள் எடுத்து அதனடிப்படையில் ஜெனிவா நிகழ்வுகளில் கலந்து கொள்ளக் கூடிய நட்பு நாடுகள் எல்லோருடனும் நாங்கள் பேசுவதனூடாக இந்த விடயங்களை முன்னெடுக்க முடியுமா என்றதையும் நாங்கள் பார்க்க முடியும். ஆகவே ஒவ்வொரு தரப்பில் இருந்தும் வெவ்வேறு விதமான கோரிக்கைகளை முன்வைக்காமல் எல்லோருமாக இணைந்து ஒரே விதமான கோரிக்கையை முன்வைப்பதே சிறந்தது.

இலங்கையில் இருக்கக் கூடிய சிவில் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து நான் கூறியது போன்று அவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்கள். அதாவது தீர்ப்பாயத்திற்கு இது அனுப்பப்பட வேண்டும். அல்லது சர்வதேச நீதிமன்றுக்கு அனுப்பப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்கள்.

ஆகவே ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான கோரிக்கைகளை முன்வைக்காமல் இந்தவிடயத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் ஒருமித்த குரலில் செயற்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நியாயத்தைப் பெற்றுக்கொள்ள உதவியாக இருக்குமென்று நாங்கள் கருதுகின்றோம்.

அந்தவகையில் தமிழ் மக்களுடைய பெரும்பான்மையான பிரதிநிதிகளைக் கொண்டிருக்கக் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஏனைய கட்சிகளுடனும்புலம்பெயர அமைப்புக்களையும் ஒன்றாகக் கூட்டி இது சம்பந்தமாக காத்திரமான முடிவுகளை எடுக்க வேண்டியது தமிழ் மக்களின் நலன்களிலிருந்து அதனையொரு முக்கிய விடயமாக நாங்கள் கருதுகிறோம். அதனை அவர்கள் செய்ய வேண்டுமென்றும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## இந்த வருடத்....

வேண்டியதே தற்போதைய தேவை எனவும் ஜனாதிபதி கூறினார்.

அரசாங்கத்தை மாற்றும் போது போராட்ட வாசகமாக இருந்த ஊழல், மோசடிகளை தோல்வியடைச் செய்ய முடியவில்லை எனவும் ஊழல்வாதிகள் சக்தி பெற்றுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்ய முயலும் போது, நாட்டை நேசிக்காமல் சுய இலாபங்களை பெற்றுக் கொள்ள முயலும் தரப்புடன் மோத வேண்டி ஏற்படுவதாகவும் நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் வெளிநாட்டு பிரதிநிதிகளையும் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

எமது கலாசார விடயங்களை அழிக்கும் செயற்பாடுகளில் வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் ஈடுபட்டுள்ளன.

அவர்கள் நாட்டின் அரசியலில் தலையிட்டுள்ளனர். அவர்கள் எமது நாட்டின் அபிவிருத்தியில் தலையிட்டுள்ளனர்.

இதனை அடையாளம் காண வேண்டும். குறிப்பாக இந்த வருடத்தில் புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க நீங்கள் அனைவரும் நாட்டை நேசிக்கும் தேசப்பற்றுள்ளவர்களை அடையாளம் கண்டு முன்னோக்கி செல்லும் தேவை இருக்கிறது என ஜனாதிபதி வலியுறுத்திக் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு அலுவலகம் புஞ்சி பொரளையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போதே ஜனாதிபதி இவ்விடயங்களைக் குறிப்பிட்டார். (ம-3)

## கேப்பாப்பிலவில் போராடும் பெண்கள்...

பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

703 ஆவது நாளாக இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்த நிலங்களை விடுவிக்குமாறுகோரி முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பூர்வீக கிராம மக்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்01.03.2017 அன்று ஆரம்பித்த மக்களது நில மீட்பு போராட்டத்தில், கடந்த ஒரு வருடங்களுக்கு முன்பு ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் மிகுதி காணிகள் விடுவிக்கப்படாமல் அதில் இராணுவத்தினர் தமது படை முகாம்களை அமைத்து நிலைகொண்டுள்ளனர்.

இந்த காணிகளை முழுமையாக விடுவிக்க கோரி மக்கள் தொடர்ந்தும் போராடிவருகின்றனர்.

இந்நிலையில் மக்களது போராட்டம் தொடர்ந்து வரும் நிலையில் அங்கு போராட்டத்தில் ஈடுபடும் பெண்களை இராணுவம் உயரமான பகுதியில் இருந்து வீடியோ புகைப்படம் எடுத்து வருவதாகவும் இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோருகின்றனர்.

இதேவேளை கேப்பாப்பிலவு இராணுவ முகாமின் பல பகுதிகளில் நவீன கமராக்கள் பொருத்தி அங்கு போராடும் மக்கள், அவர்களுக்கு ஆதரவு தர வருபவர்களையும் வீடியோ எடுத்து வருவதோடு பல்வேறு கமராக்கள் மூலம் இராணுவத்தினர் ஓடி ஓடி ஒளிப்பதிவு செய்துவருகின்றனர். அதனை விட அங்கு வருபவர்களது வாகனங்களது விபரங்களையும் சேகரித்து வருகின்றனர்

இதேவேளை இங்குள்ள இராணுவத்தினர் போராட்டத்தில் செய்தி சேகரிக்க செல்லும் ஊடகவியலாளர்களையும் புகைப்படம் எடுப்பதோடு வீடியோ பதிவும் செய்து அச்சுறுத்தல் விடுகின்றனர். மக்கள் போராட்ட இடத்தில் உயரமான பகுதிகளில் இவ்வாறு இராணுவம் இருந்து வீடியோ எடுப்பது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என கோரப்பட்டுள்ளது. (ம-281)


கொவிசெத
திகதி 2019.01.31
சீட்டிழுப்பு இலக்கம் 2021
U 09 12 24 53
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/01/31
சீட்டிழுப்பு இலக்கம் 3845
H 1 5 8 6 0 0
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1529 திகதி 2019/01/31
K D F
வெற்றி இலக்கங்கள் 16 22 53 65 போனஸ் இலக்கம் 59
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/01/31
சீட்டிழுப்பு இலக்கம் 506
லக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 09 38 49 57 54
தேசிய லொத்தர் சபை

## வயலில் அகப்பட்ட...

அறுவடையின் போது மலைப் பாம்பு ஒன்று அகப்பட்ட சம்பவம்வடமராட்சி கரணவாயில் இடம்பெற்றுள்ளது.

தற்போது நெல் அறுவடை மும்முரமாக இடம்பெற்று வரும் நிலையில் கரணவாய் பகுதியில் விவசாயி ஒருவர் அறுவடை செய்து கொண்டிருந்த போது 12 அடி நீளமான வெங்கணாந்திப் பாம்பு ஒன்று அகப்பட்டுள்ளது. நெல் அறுவடையின் போது பாம்பு கடிக்கு பலர் இலக்காவது குறிப்பிடத்தக்கது. (ம-60)

## ஜனாதிபதி மைத்தி...

நிரப்பும் படிவத்தை வழங்கி அதை உடன் நிரப்பி தருமாறு குறிப்பிட்டுள்ளனர். வீடுகளில் குடியிருப்பாளர்கள் இல்லாத இடங்களில், மாலைக்குள் நிரப்பி தருமாறு குறிப்பிட்டு சென்றுள்ளனர்.

முன்னறிவிப்பு ஏதுமின்றி இவ்வாறான விபரங்களை திரட்டும் சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் குற்றம்சாட்டியிருந்தார்.

குறித்த விடயம் தொடர்பில் பொலிஸாரிடம் வினவிய போதே மேற்குறித்த காரணத்தை தெளிவுபடுத்தியுள்ளனர். ஜனாதிபதியின் விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது வழமையான செயற்பாடு என்றும் இதே வேளை, யாழ்ப்பாணம், கோப்பாய், அச்சுவேலி பொலிஸ் பிரிவுகளில் இந்த பதிவுகள் இடம்பெற்று வருகிறதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

மேலும் ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்தை முன்னிட்டு, ஜனாதிபதி செயலகத்தின் விசேட பணிப்புக்கமைவாகவே, இந்த பதிவு நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தனர். எதிர்வரும் 6 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில், கிராமசக்தி திட்டம் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்ற பின்னர் அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு செல்லவுள்ளார். பின்னர், அச்சுவேலியில் கிராமசக்தி திட்டத்தின் ஆரம்ப நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதியின் குறித்த விஜயத்தை முன்னிட்டே, யாழ்ப்பாணம், கோப்பாய், அச் சுவேலி பொலிஸ் பிரிவுகளில், குடியிருப்பாளர் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்றும் அந்த பகுதியிலுள்ள நிறுவனங்கள், வெளியிடங்களிலிருந்து வருபவர்கள், வேலைக்காக தங்கியிருப்பவர்கள் பற்றிய விபரங்களை துரிதகதியில் திரட்டும்படி பொலிஸாருக்கு பணிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ம-9)

## கேப்பாப்பிலவு...

சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கேப்பாப்பிலவில் தமது சொந்த பூர்வீக நிலங்களை விடுவிக்க கோரி நேற்று 701ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் இந்த சம்பவம் குறித்து ஆழ்ந்த அனுதாபத்தினை வெளியிட்டுள்ளனர். வீதி விபத்தில் உயிரிழந்த குறித்த தாய் தனது ஒரு ஏக்கர் நிலத்தை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன்692 நாட்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-281)

## விக்னேஸ்வரன்...

தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய கட்டளையை அமுலாக்க தவறியமைக்காக விக்னேஸ்வரனுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு டெனீஸ்வரனால் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று இந்த வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படும் என்று கடந்த விசாரணையின் போது மேன்முறையீட்டு நீதிமன்றால் அறிவிக்கப்பட்டிருந்த போதும், தீர்ப்பு தயாராகாத நிலையில் அதனை எதிர்வரும் பெப்ரவரி 13 வரையில் மீண்டும் ஒத்திவைப்பதாக நீதியரசர் ஜெனட் டி சில்வா அறிவித்தார். (ம-3)


17-ம் திகதி நடைபெறவுள்ள
சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கான கருத்தரங்கு
02.02.2019 (நாளை)
காலை 9.30
கோலாசிற்றி
234,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0778435224

விசேட இறுதி கருத்தரங்குகள்
அதிபர் சேவை தரம் - 3
Feb 10 பரீட்சை
சனி (02/02)
9.00 - 4.00 மணிவரை
விடய ஆய்வு
ப.ஆறுமுகம்
ஞாயிறு (03/02), திங்கள் (04/02), சனி (09/02) தினங்களில்
9 - 4 மணிவரை
வளவாளர்கள்
தவசேகர்
சுபாகரன்
பாலசந்திரமூர்த்தி
கணேசன்
மகாலிங்கசிவம்
தமிழ்ந்திரன்
சுகாதார முகாமைத்துவ உதவியாளர்
சனி, ஞாயிறு
9.00 - 3.00
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு
நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய
தென்னிலங்கையில் தீராத நோயில் படுக்கையில் இருந்தவர்களை கூட எழுந்து நடமாட செய்த அதிசயத்தை நிகழ்த்தியவர் தற்போது யாழ் மக்களுக்காகவும் சேவை வழங்க முன்வந்துள்ளார்.
(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணர்களில் ஒருவர்)
கிளினிக் நடைபெறும் திகதி
யாழ்ப்பாணத்தில் : 02.02.2019 (நாளை)
பரந்தனில் : 09.02.2019
(C-5357)
90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்
I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ்.மருத்துவமனை
இல. 125, பிரதான வீதி, (2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்) யாழ்ப்பாணம்.
பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம், பரந்தன் சந்தி, பரந்தன்.
தொடர்பு : 077 444 1082, 077 440 5969

கருத்தரங்கு: இலங்கை அதிபர் சேவை - 3 - கிளிநொச்சி
02.02.2019 சனிக்கிழமை
1.30pm – 5.30pm
P.கமல்தாசன் மற்றும் வளவாளர் குழுவினர்
கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி
தொடர்பு : 077 111 6739, 077 548 3470
(7376)

விசேட கருத்தரங்கு
இலங்கை அதிபர் சேவை - 3
02.02.2019 சனிக்கிழமை
9.00am – 3.00pm
P.கமல்தாசன்
A.சுபாகரன்
S.மகாலிங்கசிவம்
விசேட வகுப்புக்கள் 5/2, 7/2, 8/2 ஆகிய திகதிகளில் 3.00pm – 6.00pm
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 077 111 6739
(7376)

விற்பனையாளர் தேவை
யாழ். கச்சேரியடியில் உள்ள போட்டோ பிரதி, பான்சி கடைக்கு விற்பனையாளர் தேவை (பெண்கள்) தொடர்புகளுக்கு: 077 217 4741, 021 221 9815
(7378)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-5346)
DELIVERY IN 3-5 DAYS
UK- 550. /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

இந்திரா கொன்ஸ்ரக்சன்ஸ்





எமது சேவைகள்
01. புது வீடு கட்டுதல் (1 சதுர அடி 3,000/=லிருந்து)
02. குறையாக கட்டிவிடப்பட்ட வீடுகள் பூரணப்படுத்தல்.
03. பழைய வீடுகள் நவீன முறையில் புனரமைப்புச் செய்தல்.
04. வீட்டுடன் இணைந்த நவீன குளியலறை (Modern Attach Bathroom) அமைத்தல்.
05. தண்ணீர் தாங்கி (Tank) கட்டுதல்.
06. பிளாற் (SLAB) போடுதல்.
07. வீட்டிற்கு கூரை போடுதல்.
08. நிலத்திற்கு மாபிள் (Tile) பதித்தல்.
09. வீட்டிற்கு மட்ட சீற் அடித்தல்.
10. மதில் கட்டுதல்.
குறிப்பு : குறிப்பிட்ட காலத்துக்குள் முடித்துக்கொடுக்கப்படும். தரமாக, நவீன தொழில்நுட்ப முறை மூலம் குறைந்த செலவில் அமைத்துத்தரப்படும். தேவையாயின் வங்கி கடன் ஒழுங்கு படுத்தப்படும்.
(C-5358)
Tel: 0786155929 - Viber: 0786371396
பலாலி வீதி, கோண்டாவில்.

மயூரனின் ஜேர்மன் கல்லூரி
ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கு செல்பவர்களுக்கான "Deutsch" மொழிகள் மற்றும்
Spoken English - 3 months (Certificate Course) மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசக்கூடிய இலகுமுறை கற்பித்தல்.
பேச்சு மொழி சிங்களம் - 3 months (Certificate Course)
(7338)
German Swiss Academy
No.39/4, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (Near Rasi Collection)
A9 வீதி, பெரியரசடி சங்கத்தானை, சாவகச்சேரி.
T.P: 077 645 4998 / 021 221 4430

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(7330)

மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் பொறியியலாளர் தொழில் புரியும் 1975 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
(7295)
T.P : 077 834 3258

ஓம் நல்லூர் கந்தன் துணை
நல்லூர் கந்தன் TRAVELS
Bus Booking Center
ஆசனப் பதிவகம்
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம்
Colombo ⇄ Jaffna
Jaffna 0777840769 Hotline 0777922265 Colombo 0777154672
590/5 பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(நல்லூர் கந்தசுவாமி கோயில் தெற்கு வீதி
(7377)

Ahtus
Ahtus Enterprises (Pvt) Ltd
ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்
குழந்தைகள் தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.





Your Baby is our Concern
உலகின் அதிசிறந்ததை உங்கள் குழந்தைக்கு வழங்கிடுங்கள்
இல.30, கன்னாதிட்டி றோட், (வண்.சிவன் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 742 7322




(C-5353)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.